Reg. No. M. 3066 1938. ஜூலை 1.

"PAHUTHARIVU"

(REASON)

மலர் 4 இதழ் 3.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதார்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடமைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

காதல் (பாட்டு) (எஸ். சிவப்பிரகாசம்)	1
மனித முதாணதையர் (தோழர் சி வீ. குப்புசாமி)	3
பூர்வீகத் தமிழரைப்பற்றி ஆராய்ச்சியாளரின் கருத்து (ச. முனுசாமிப்பிள்ளை)	8
விமலா அல்லது விதவையின் மறுமணம் (கதை)	13
மாத்திரீகம் (சார்லஸ் டி. கோர்ஹாம)	23
ஆண்வேடம் பூண்ட பெண்	29
கல்வி பயிற்சி ஆரம்பம்	32
காற்றையும் நீரையும் அடக்கலாம்	36
தற்காலஸ்திரீயப் பெண்கள் நிலை	46
செயற்கை ரத்த சிருஷ்டி	55

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 4. } ஈரோடு 1938 ஜூலை 1. { இதழ் 3.

காதலே!

(எஸ். சிவப்பிரகாசம்)

காதல் தழைக! காதல் தழைக!
பூதலமெங்கும் காதல் தழைக!
காதலுண்டேல் வாழ்வினில் இன்பம்!
காதலின்றேல் வாழ்வினில் துன்பம்!
காதல் வாழ்க! காதல் வாழ்க!
காதலினாலே அன்பு காண்பீர்!
அன்பு தன்னில் வீரம் அமையும்!
வீரம் வேண்டுக! வீரம் வேண்டுக!
வீரராகிச் சமத்துவம் விளைக்க!
மாதரைப் போற்றுக! மாதரைப் போற்றுக!
காதல் விளக்குகள் மாதர் கண்டோம்!
சஞ்சலம் தீர்ந்த நல் வாழ்வும்
வஞ்சியர் காதலாம்! வாழ்கதற் காதலே!!

பகுத்தறிவின் நன்மை.

"ஞானபண்டித மோதிலால்" என்ற மெட்டு,

பல்லவி

பகுத்தறிவே உலகில்—பாங்கிலங்க.

மானிடர் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொடுக்க
மரைவுகளைத் துலக்க—பகுத்தறிவால் (பகு)

உலகினில் சிறந்த உயர்குணமிலங்க
ஊக்கமதாய்ப் படிப்போம்—பகுத்தறிவை (பகு)

மூடபக்திகளாம் முன்னோர் சட்டுக்கதையை
முழுதுமே விளக்கிக்காட்டும்—பகுத்தறிவே (பகு)

மந்திர மதத்தின் மயக்கத்தை வினைக்கும்
தந்திர குணத்தை யறிவீர்—பகுத்தறிவால் (பகு)

சமதர்ம வாதி சாதிக்கு வியாதி
சாற்றிட இதையுணர்வீர்—பகுத்தறிவால் (பகு)

இகத்தினிலின்பம் ஈய்ந்திட பந்தம்
ஈ. வெ. ராவினீன் சொந்தம்—பகுத்தறிவாம் (பகு)

தந்திரத்திலும், வஞ்சகத்திலும், மக்களின் அறியாமையினாலும் ஆட்சிசெய்யும் அரசாங்கத்தைவிட, துப்பாக்கியாலும்பீரங்கியாலும் ஆட்சிசெய்யும்அரசாங்கம் மேலானது.

* * *

கடவுளும் பேயும் மனிதர்களின் மனதிற்குத் தோன்றக்கூடியவைகளே தவிர பிரத்தியக்ஷத்திற்கோ அனுபவத்திற்கோ தோன்றக்கூடியதல்ல. ஈ. வெ. ரா.

மனித முதாலைதயர்

(தோழர். சி. வீ. குப்புசாமி எழுதுவது.)

இன்று ஆராய்ச்சி அதன் சிகரத்தை அடைந்திருக்கிறது. மக்கள் விஞ்ஞானத்தின் உயர்வை உணர்ந்து அதில் பங்கு கொள்ளுகின்றனர். காகரீக மனிதர்கள் வாழும் தற்கால ஐரோப்பாவில் ஒரு காலத்தில் கோரமான ரூபமுடைய மனிதர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களைப்பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகக் கூறுவோம்.

இக்கோர மனிதர்கள் காட்டு மிராண்டிகள் போன்று குகைகளில் வாசஞ் செய்து வந்தனரென அறியக்கிடக்கின்றது. இப் பழங்கால மனிதர்களின் நிலையை இன்று விஞ்ஞானம் புட்டுப் புட்டுக் காட்டுகின்றது. பல எலும்புக் கூடுகள் மண்ணிலிருந்து "புதைப் பொருள் ஆராய்ச்சியினால்" கெல்லி யெடுக்கப் பட்டிருக்கின்றன.

அண்மையில் பல மண்டையோடுகள் 'பிரீட்டிஷ் புதைப் பொருள் ஆராய்ச்சியினரால்" கண்டுப் பிடிக்கப் பட்டிருக்கின்றன. புதைப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் காடோறும் புதுப் புது விஷயங்களைக் கண்டுபிடிப்பதனால் விஞ்ஞான உண்மைகளை அவைகள் ஸ்பஷ்டமாகஎடுத்துக்காட்டுகின்றன. கொஞ்ச காலத்திற்கு முன்னர் பிரீட்டனில் சலக்ஸ்பீல்டு என்ற இடத்தில் ரஸ்தா போடுவதற்காக ஜனங்கள் மண்ணை வெட்டிக் கொண்டிருந்த பொழுது ஒரு மனித மண்டையோடு கிடைத்தது. இதைச் தற்செயலாக சார்லஸ் டாசன் ஏ. எஸ். ஏ எப். ஜி. எஸ். என்பார் பார்க்க நேரிட்டது. அவர் இதன் இரகசியங்களை கண்டு ஆராய முற்பட்டனர். இதன் பய னாக அவர் இந்த மண்டையோடு 5 லட்சம் வருடத்திற்கு முன்னர் வசித்த மனிதனின் மண்டையோடாயிருக்கலாமென அபிப்பிராயப் பட்டார். இந்த மண்டையோட்டிற்குப் பக்கத்தில் ஒரு தொடை எலும்பும் இருந்தது. இந்த ஓடு மனித

ஓட்டுக்குச் சம்மந்தமான தென்றாலும், அது ஒரு பெரிய யானையின் எலும்பை ஒத்திருந்தது. இந்த இரண்டு எலும் புகளையும் ஆராய்ச்சி செய்தபோது புதிதாகக்கண்டு பிடிக்கப் பட்ட எலும்புக் கூட்டுக்குச் சம்மந்தமான மனிதன் ப்ரம் மாண்டமானவனாயிருந்திருக்கலாமென அபிப்பிராயப் பட் டார் சார்லஸ். இந்த ப்ரமாண்டமான மண்டையோடு சாத ரண மானதல்ல. இந்த ஓடு அதிகம் தடித்திருந்தது. மேலும் இது எளிதில் உடையத் தக்கதல்ல. அதன் உச்சியின் கனம் 10 அல்லது 12 மில்லி மீட்டர் தடிப்பு கொண்டதாயிருந்தது. சாதாரண பிரீட்டஷாரின் ஓடு 5 அல்லது 6 மில்லி மீட்டர் கனம் கொண்டதாயிருக்கிறது. சலக்ஸிலுள்ள இந்த எலும் புக் கூட்டின் கனம் 1300 சென்ட்டி மீட்டர் கொண்டதாயிருந் தது. இவைகளைப் பார்க்கும்போது "அக்கால பிரீட்டஷார் கள் கோரமான ரூபம் கொண்ட மனிதர்களாக இருந்திருக் கக் கூடும்" என சார்லஸ் கூறுகிறார்.

பலூசிஸ்தானத்தில் கார்மல் மலையோரத்தில் 30,000 வருடத்திற்கு முன் வசித்துவந்த ஒரு மனிதனின் எலும்புக் கூடு இப்போது அகப்பட்டிருக்கின்றது. குகைகளில் வசித்து வந்த இந்த மனிதனின் எலும்புக் கூடுகள் இப்போது ஒரு பெண்ணினால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. 200 ஆண்டுகள் வரை இந்த எலும்பைப் பற்றிய ஆராய்ச்சிகள், இதரர்களால் செய்யப் படவில்லை. ஆனால் இப்போது தான் மேற்படி கங்கை இதன் வரலாறுகளை அறிய முற்பட் டிருக்கின்றாள். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளை நவீன காகரீகத்தில் மூழ்கித் திளைக்கும் பலர் கம்ப மாட்டார்கள். அவர்கள் பலகாலம் ஆராய்ச்சி செய்தே தங்களது திட்ட வட்டமான முடிவைக் கூற முன் வருகின்றனர். அவர்களின் ஆராய்ச்சி முடிவை அறிவு உலகம் அவ்வளவு எளிதில் அலட் சியம் செய்துவிட முடியாது; அவர்களின் தத்துவம் அனுபவ ரீதியாக ஸ்தாபிக்கப் பட்டது.

எலும்புக் கூட்டைப் பற்றிய ஆராய்ச்சிகள் இன்று பல மாக நடைபெற்று வருகின்றன. எலும்புக் கூட்டின் சில அம் சங்கள் விஞ்ஞானிகளின் தத்துவத்தை இன்று உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது. சுமார் 6 வருடத்திற்கு முன் கேம்பிரிஜ் என்னு மிடத்தில் டொராத்தி என்னும் பெண்ணுக்கு ஒரு குழந்தையின் எலும்புக் கூடு அகப்பட் டது. அதைக் கொண்டு அவ் வெலும்புக் கூடு அகப்பட்ட இடத்தின் சுற்றுப் புறங்கள் கெல்லப்பட்டன. அப்போது

இன்னும் இரு இதாமனிதர்களின் எலும்புக் கூடுகள் அகப் பட்டன. இதற்கு அடுத்த வருடம் டி. டி. மாக்கௌன் என் பவர் கார்மல் மலையடிவாரத்திலுள்ள எலும்புக் கூடுகளை கெல்லி யெடுக்கும் வேலையில் ஈடுபட்டார். அங்கு எட்டு எலும்புக் கூடுகளைக் கண்டனர். எல்லாம் சேர்ந்து பன்னி ரண்டு எலும்புக் கூட்டின் சின்னங்களாகியது ஆனால் கான்கு அல்லது ஐந்து உருப்படிகளில் தான் சகல அவயவமும் பொருத்தமாகக் கிடைத்தன. மற்றவைகளில் சில பாகங்கள் சிதைவுண்டிருந்தன. அக்காலத்தில் வசித்து வந்த குகை மனிதன் தனது சவத்தை ஆழமில்லாத குழிதோண்டி புதைத்து வந்தான். அதன் பயனால் தான் இன்று மேற் கண்ட எலும்புக் கூடுகள் எளிதில் கெல்லி யெடுக்கப் படுகின் றன. இந்த ஆதாரங்களை வெளியிடுவது ஆச்சரியமான தெனக் கூறிவிட முடியாது. இந்த ஆதாரங்களை வைத்துக் கொண்டு உருவங்களைக்கற்பனையாக சித்திரிப்பது தான் அதி ஆச்சரியமான விஷயம். மேற்படி எலும்புக் கூடுகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு படம் வரையும் வேலையில், இன்று பலர் ஈடு பட்டிருக்கின்றனர். டி. டி. மாக்கௌன் கண்டு பிடித்த பன்னிரண்டு எலும்புக் கூடுகளில் ஒன்று மிக வும் விசித்திரமானதாயிருந்தது. அது தனது கை எலும் பால் ஒரு பன்றியின் தாடையெலும்பை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தது. இதன் காரணத்தைத் திட்டமாகக் கூறு வது இயலாது. எனினும் அக்காலத்திய மனிதன் இறந்த வுடன் அவனோடு பன்றியிறச்சியைச் சேர்த்துப் புதைக்கும் ஒரு சடங்கு இருந்திருக்கலாமென பலர் தெரிவிக்கின்றனர்.

அக்காலத்தில் கோரமனிதர்களாகவும், குரங்கு மனிதர் களாகவும் இருந்தவர்கள் இன்று எங்கே? எனப் பலர் கேட்கக் கூடும். ஆனால் இம்மாதிரியான கேள்வியை இன்று சாதா ரணமான மனிதன் கூடகேட்க மாட்டான். ஏனெனில் இன்று விஷய விளக்கம் தலைதெறிக்கும் வேகத்தில் ஏற்பட்டு வரு கிறது. குருட்டுத் தனமான கேள்விகளை இன்றைய மக்கள் கேட்பின் அறிவுலகம் விழுந்து விழுந்து தான் சிரிக்கும். 100 வருடத்திற்கு முன்விருந்த பிரிட்டாஷாரின் நிலை இன்றைய நிலைக்கு மாறுபட்டதாயிருக்கின்றது. இன்று பிரிட்டனின் நிலை வேறு இதைப்போல பல லட்சக்கணக்கான வருடங் களாக வாழ்ந்து வருபவர்கள் எப்படி வித்தியாச மில்லாமலி ருப்பார்கள்? என்ற சாதாரண அறிவு சகலருக்கும் உதய மாகும். ஆகவே ஆராய்ச்சிக்காரர்களை நாம் எளிதில்

மறுத்துவிட முடியாது. அறிவு உலகத்தின் கீழ் அமையாத மனிதர்களே வீண் குதர்க்கமான கேள்விகளைக் கிளப்பிக் கொண்டிருப்பார்கள்.

தென் கென்சிங்டன் கண்காட்சி சாலையில் ஜாவா தேசத்தின் ஆற்றுப் படுகையில் கெல்லி யெடுக்கப்பட்ட சில சின்னங்கள் காணப் படுகின்றன. ஆங்குள்ள ஒரு மண்டையோடும், இரண்டு பற்களும், ஒரு தொடை யெலும்பும் ஒரு நூதன தோற்றத்தையளிக்கிறது. இந்த எலும்புகளை மனிதனது எலும்புகளென்றோ அல்லது குரங்கின் எலும்புகளென்றோ சொல்வதற்கில்லை. ஆனால் இது யாருடையது? இது மனிதனுக்கும்—குரங்கிற்கும் இடையே ஏற்பட்ட ஒரு இனத்தைச் சார்ந்ததெனக் கூறப்படுகிறது. இதனால் ஜாவாவில் ஒருவித "வகுப்பு" இருந்ததென அறியக் கிடக்கின்றது. இந்த உருவத்திற்கு பல்விதமான அமைப்புகளிருந்ததால் மனிதன் குரங்கிலிருந்து தான் பரிணமித்தான் என்ற ஆதாரத்திற்குத் தகுந்த மேற்கோளைக் காட்டுகிறது. மேற்படி சின்னங்கள் இன்றும் ஜாவாவில் வசித்து வரும் ஒரு குரங்கு மனித இனத்தைச் சேர்ந்ததென நிரூபிக்கப் படுகிறது.

மேற்கண்ட விபரங்களைப் போல் ஜர்மெனியிலும் புராதான மனித எலும்புக் கூடுகளை நிச்சயப் படுத்த ஒரு சில சின்னங்கள் காணப்பட்டன. டசல்டாங் என்னும் நிலவறையில் ஆதிகால மனிதனது சிதறுண்ட எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டு பூன் என்னுமிடத்திலுள்ள கண் காட்சி சாலையில் வைக்கப் பட்டிருக்கிறது.

இதன் மண்டையோட்டில் புருவவளைவு காணப்படுகிறது. நெற்றி ஏறி இறங்கியிருக்கிறது. ஆனால் மூளைப்பகுதியும் மண்டையின் உட்பாகமும் மனிதனையொத்திருக்கின்றன. இந்த சின்னத்தையும் தென்கென் சிங்டனில் இருக்கும் ஜாவாமனித ஓட்டின் சின்னத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை களிரண்டிலும் அதிக பேதங்கள் காணப்படவில்லை. எனவே ஒரே காலத்தில் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் (ஜாவாவிலும்) ஒரேவகையான இனத்தினர் இருந்தனரென்பது ருசுவாகின்றது. ஒரு காலத்தில் உலகெங்கும் இத்தகைய இனத்தினர் வசித்துவந்தார்களென விஞ்ஞான வல்லுநர்களால் கூறப்படுகிறது. எனவே பூர்வ மனிதர்களது மூதாதை "குரங்கு" எனக் கருதப்படுகிறது. டார்வின் சித்தாந்தத்தை உண்மைப்படுத்த பல ஆராய்ச்சிகள் இன்று உலகில் செய்யப்

பட்டு வருகின்றன. பல ஆராய்ச்சிகள் நமக்கு இன்று டார்வின் கூற்றை மெய்ப்பிக்கத்தான் பிக்கத்தான் செய்கின்றது. காளைடவில் பல நூதனங்களும் கண்டு பிடிக்கப்படுமென்பது திண்ணம். டார்வின் சித்தாந்தத்திற்கு இன்று பலம் கொடுக்க ஸர். ஆதர் கித், ஜாஜ் எலியட் ஸ்மித் போன்ற அறிஞர்கள் முன்வந்து நிற்கின்றனர். இவர்கள் தருந்த ஆதாரங்களை மறுக்கும் இனத்தினரோடு வாதிட தோள்தட்டி நிற்கின்றனர். இன்று உலகிலுள்ள பலர் டார்வினது கூற்றை சர்வசாதாரணமாகவே ஏற்றுக கொள்கின்றனர். சில வருடங்களுக்கு முன்னர் பரிணாம வாதத்தை மறுத்த ஸர். ஆப்புரோஸ் புளெமிங் என்பாருக்கு ஸர். ஆர்தர் கீழ் விடுத்துள்ள பதிலில் பல விஷயங்கள் பொதிந்து கிடக்கின்றது. இன்றுள்ள புதைப்பொருள் ஆராய்ச்சியாளர் மனிதனது மூதாதைகளை ஆதார பூர்வத்துடன் கண்டு பிடித்து வருகின்றனர். பரிணாம வாதத்தின் முழு விபரங்களையும் நாம இச்சிறு கட்டுரையில் ஆராய்ந்து விட முடியாது. அவகாசம் ஏற்படும் போது பரிணாமவாதத்தைப் பற்றியும், பூர்வமனித வரலாறுகளின விபரமான ஆராய்ச்சிகளைப்பற்றியும் ஜீவர்களின் புராதானம், மனித சமாஜம் முதலியவைகள் அமைந்த விஷயாதிகளையும எடுத்துரைப்போம.

மனித நிற பேதம் மாட்டிலுமா புகுந்தது?

தொத்து வியாதியைத்தடுக்கவும் ஜெர்மன் ஜாதிக்காளைகளைக் காப்பாற்றவும் யூதர்களிடமிருந்து பசு மாட்டையோ, அல்லது எருமைகளையோ ஜெர்மன் ஜாதி காளைகளோடு பலுகப்பண்ணும் நோக்கத்தோடு வாங்கக் கூடாதென்றும். அப்படி யூதர்களிடமிருந்து வாங்கிய பசு, எருமைகளை ஒரு வருடத்திற்கு தனியான மேற்பார்வையில் வைத்திருக்க வேண்டும். அக் காலத்தில் அவைகளைப் பலுகப் பண்ணுதற்கு உபயோகிக்கக் கூடாது என்றும் கோனிக்ஸ்டார்ப் மேயர் உத்திரவிட்டிருக்கிறாராம். மனித நிற பேதம் மாட்டிலுமா புகுந்தது?

பூர்விகத் தமிழரைப்பற்றி ஆராய்ச்சியாளரின் கருத்து.

(ச. முனுசாமிப்பிள்ளை, டர்பன்)

தோற்றம்.

உலகம் தோன்றிய காலந்தொட்டு மக்களின் உற்பத்தி, நாகரிக வளர்ச்சி முதலியனவற்றை மேலை நாட்டவரும், தமிழறிஞரும், மற்றோரும் எவ்வாறு கூறுகின்றனர் என்பதைப் பற்றி ஈண்டு சிறிது கூறுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

இப் பூமியானது சூரியனிலிருந்து தெரித்து விழுந்த ஒரு பெரும் பொறி யென்றே கருதப்படுகிறது. அங்ஙனம விழுந்த அனற்பிழம்பின் வெப்பம் ஆறுவதற்கு எத்தனை கோடி ஆண்டுகள் ஆயினவோ தெரியவில்லை. இப்பொழும் மிக ஆழத்தில் அனலாயிருப்பதை நாம் அறியக் கிடக்கிறது. பூகம்பம் உண்டாவது கொல்ஸ்டனிலும் இதை எடுத்துக்காட்டியிருக்கலாம். நிலம் ஆறத்தொடங்கிய காலையில் முதன்முதல் கடற் பூண்டுகளும், மலைப் பூண்டுகளும், மீன்களும், பின்னர் சிறு கொடிகளோடர்ந்த காடுகளும் ஊர்ந்து செல்வனவாய் பூச்சிப் புழுக்களும், பின்னர் பெரு மரங்களும், விலங்கினங்களும், இறுதியாக மக்களும் தோன்றினர் என்று சில நூல் வல்லார் கூறுகின்றனர்.

மக்கள் முதல் தோன்றிய நிலம்.

மக்கள் நிலப் பரப்பின் எப்பகுதியில் முதன் முதலாகத் தோன்றி வாழ்ந்தனர் என்பதே முதலியமாய் அறிய வேண்டியது. சூரியனைச் சுற்றிவரும் நிலவுருண்டையின் கடுப்பகுதியே, முதலிற்குளிரப் பெற்றுப் பின் ஏனைப் பகுதி குளிர்ந்தென்பதை அந் நிலவுருண்டையின் வட துருவ, தென் துருவப் பகுதிகளின் சுழற்சி விரைவின்மையையும், நிலத்து கடுக் கோட்டின் பகுதிச் சுழலும் விரைவையும் நுணுகி அறியின் இனிது விளங்கும். ஆயினும், வடதுருவத் தென்துருவப்

பகுதிகள் கடுங் கோட்டுப் பகுதியிலும் குளிராயிருப்பதெப் படியெனச் சிலர் கேட்கலாம். சூரியனது ஒளியோடு கூடிய வெப்பமான கதிர்கள் உலகத்து நடுப் பகுதியில் எதிர் முகமாய் விழுதலால், ஆண்டு கூடிய வெப்பமும் துருவப் பகுதிகளில் மிகச் சாய்ந்து படுவதால், ஆங்கு குறைந்த வெப்பமும் இருப்பது எவரும் எளிதில் அறியத்தக்கது.

இவற்றையெல்லாம் நுணுகி அறிந்த 'எக்கல்' என்னும் ஜர்மனிப்பு புலவரும், குமரிமுனைக்குத் தெற்கேயுள்ள பகுதியின் நிலப்பரப்பே மக்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான நிலையை முதன் முதல் அடைந்தது என்றும், அங்குதான் மக்கள் முதல் முதல் தோன்றி வாழ்ந்தனரென்றும் கூறியுள்ளார்.

"காட் எலியட்" என்பவர் தமது மறைந்த லெமூரியா என்னும் நூலில், பாறைகளின் கொண்மை மிக்க தன்மையை விகவினிவாய் ஆராய்ந்து, தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள கற்பாறைகளே மிகவும் பழமையானதென்றும், இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து ஒரு பெரும் மலைத் தொடர் தென் பக்கமாக நீண்டு கிழக்கும் மேற்குமாகச் சென்றிருந்ததென்றும் கூறியுள்ளார்.

அயிர்லாண்டிலுள்ள மலைகளின் பழமையை ஸ்காக்க, வடகாட்டிலுள்ள இமயமலை, பச்சிளங் குழந்தையை ஒக்கும் என்ற அறிஞர் கூற்றும், இங்கு கருதத்தக்கது. 'புலத்துறை போய் அக்கிலி' என்பாரும், இமயமலைத் தொடர்பை, லெமூரியாக் கண்டத்துக்குப் பெரும் முக்கியமானதாய்க் கருதுவது கவனிக்கத் தக்கது. காட் எலியட் என்பவர் எழுதிய நூலில் காணும் படத்தில், லெமூரியா இருந்த காலத்து எகிப்து நாடு கீரிலிருந்து வெளித்தோன்றவேயில்லை. ஆகவே, தமிழகமே எகிப்து நாட்டிலும் பழமையான தென்பது கொள்ளக் கிடக்கிறது. இங்ஙனமாக உலகத்தின் தன்மையை ஆராயுங்கால் மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமான நிலப்பரப்பு உலகத்தின் தென்கோடலைத் சேர்ந்த பகுதி யென்பது புலப்படுகின்றது.

கடற் பெரு வெள்ளங்கள்.

இதுவரை இவ்வுலகத்தில் ஏற்பட்ட கடற் பெரு வெள்ளங்களின் காலங்களைக் காட் எலியட் என்பவர் குறித்துள்ள படி பார்க்கில், பதினாயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்னர்

கோர்த்துள்ள கடற் பெரு வெள்ளமே முதன்மையானதென்றும்; இரண்டாவது வெள்ளம் எண்ணூறாயிரம் ஆண்டுகளுக்கு முன் கோர்த்திருக்கக் கூடுமென்றும, மூன்றாவது வெள்ளம் இரு நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும், நான்காவது வெள்ளம் எண்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும், ஐந்தாவது வெள்ளம் ஒன்பதினாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குச் சிறிது முன் பின்னுமாயிருக்கலாமென்றும் அறியக் கிடக்கின்றன.

இப்பெரு வெள்ளங்களின் காரணமாகப் பல நிலப்பரப்பு, நீர்ப்பரப்பாயும், நீர்ப்பரப்பு நிலப்பரப்பாயும் மாறியதென்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. சுமேரியனைக்குத் தெற்கிலிருந்த பல நாடுகள் நீரினுள் மறைந்தன வென்றும், அறியக்கிடக்கின்றன. அக்காலத்தில் தென்னாட்டவர் பல நாடுகளுக்குச் சென்றிருத்தலும் கூடும்.

கற் காலங்கள்.

மக்களின் நாகரிக வளர்ச்சியை ஆராய்ந்தோர் பழங்கற் காலம், புதுக் கற்காலம், செப்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலமென்று அவ்வக்காலங்களில் வழங்கிய கருவிகள் செய்யப்பட்ட நிலக்கணியினைக் கொண்டு காலம் வகுத்திருக்கின்றனர்.

மேல்நாட்டுப் புலவர்களின் ஆராய்ச்சியின்படி நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் திருத்தமுறாத கருவிகளை, முதன் முதற் கல்லினாற் செய்துள்ளார்கள் என்றும், ஆங்காங்குத் தட்ப வெப்ப நிலைக்குத் தக்கபடி நாகரிக வளர்ச்சி பெய்தினர் என்றும் அறியக்கிடக்கின்றது.

தென்னிந்தியாவிலும், தென் ஆப்பிரிகா, எகிப்து முதலிய விடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட கற் கருவிகள் மிகவும் ஒரே தன்மையனவாயிருக்கின்றன என்பர். ஜாவாத் தீவில் காணப்பட்ட முதன் மனித எலும்புங் கூடும், ஜர்மனியில் ஏயிடல்பார்க்கு என்ற இடத்தில் தோண்டிபெடுக்கப்பட்ட மோவா யெலும்புப் பகுதியும், இங்கிலாந்தில் சசெகுசு என்னுமிடத்தில் காணப்பட்ட மண்டையோடும் தம்முள் ஒரு தன்மையனவாகக காணப்படுகின்றன.

தமிழர் தென்னாட்டவரே.

இனித் தென்னாட்டவரின் மூச்சங்கங்களையும், காகரிகத்தையும், அதன் பழமையையும், அவர்களின் இலக்கிய இலக்கண வளர்ச்சிக் காலங்களையும் ஒரு சிறிது கூறுவதற்கு முன், பண்டைத் தமிழர் தென்னாட்டவரே என்பதை ஆசிரியர் கா. சுப்பிரமணியம் பிள்ளை ஆகாரத்தோடு மிக விரிவாய் எடுத்துக்காட்டியதின் ஒரு சிறு பகுதியை இங்குத் தருவோம்.

"எக்கேல் ஹக்கிலி, டோயினார்டு, பேர்கசன், ஈவன்சு முதலியோர் தென்னாட்டின் தொன்மையைப்பற்றிக் கூறுங் கருத்துக்களாலும், நில நூல், தொல்லுயிர் நூல் முதலியவற்றின் சான்றுகளாலும், தென்னாட்டிற்கும், மேலை ஆசியாவிற்கும் கப்பல் வாணிபம் மிகப் பழைய காலத்தே கடந்ததாகத் தெரிவதாலும், தமிழரின் ஒரு பகுதியாரே தென்னாட்டிலிருந்து அக்கோடியா முதலிய இடங்களுக்குச் சென்றனரென்று கொள்ளுதலே பொருத்த முடைத்தும். ஆரியர் வடமேற்கு வழியாக இந்தியாவிற்கு புகுங்காலத்து பெலூசிஸ்தானம் முதலிய இடங்களிலும் வடமேற்கு இந்தியாவிலும் தமிழ்ச் சார்பாய் மொழிகள் வழங்கின என்பது அறிஞர் ராப்டன் என்பவர் கருத்துமாகும்"

இலங்கை.

சுமார் கி. மு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு பெரு வெள்ளத்தின் பின்னேயே இலங்கையானது தமிழ் நாட்டினின்றும் பிரிவுபட்டதென்பர்.

காலஞ்சென்ற ஆசிரியர் சாத்திகேய முதலியார், "குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும், இடையிலுள்ள பெருவளநாடே பழந்தமிழ் நாடாகும். இது பெரியதொரு ஆற்றிடைக் குறைபாகலின், இதற்கு அலங்கமென்றும் பெயராம். அலங்கம்-லங்கா-லங்கையாயிற்று அலங்கமெனினும் ஆற்றிடைக்குறையெனினும் ஒக்கும், இலத்தீன் பாஷையில் இலங்கைக்கு டாப்ரோ பேன் என்று பெயர். டாப்ரோபேன் என்பது தாம்ரபரணி என்பதின் சிதைவு. கடல் கோர்ட் படாமுன்னம் இலங்கைக்கு இப்பொழுது தென் பாண்டி நாட்டில் ஓடும் தாம்ரபரணியின் பாய்ச்சலிருந்தமையால் அப்பெயர் வந்தது" என்று அவர் இயற்றிய அரிய மொழி நூலில் குறிப்பிட்

நல்ல து ஆராய்ச்சி பாள ருக்கும், தமிழ் நாட்டவருக்கும் பெருமையைக்கொடுப்ப தென்றாகும்.

தமிழறிஞர் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை என்பாரும், "ஈழமும் தமிழ்ச் சங்கமும்" என்னும் கட்டுரை யொன்றில், இவற்றை நன்கு கூறியிருப்பது நோக்கத்தக்கது.

அவர் 'கி. மு. ஐந்நூற்று நாற்பத்து மூன்றாவது ஆண்டில், விஜயன் என்னும் அரசன் சிங்கள அரசை நிலைநாட்டு முன் தமிழரது அரசு இலங்கையில் இருந்த தென்றும், அந் நாட்டிற்கே நாகதீவு என்று பெயர் வழங்கிய தென்றும், அக்காலத்து அரசர்க்கு மணிநாகர் என்ற பெயர் இருந்ததென் றும், கி. பி. 38ல் இளநாக னென்னும் அரசன் அரசாண் டனன்" என்றும் கூறியுள்ளார்.

தலைச்சங்கம்.

காட் எலியட் என்பவர் கூறிய ஐந்தாவது கடல் வெள் ளம் ஏறக்குறைய ஒன்பதினாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னேயே நிகழ்ந்ததாகும். அங்ஙனமாயின் யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட முச்சங்கங்களின் முதற் சங்கம் இக் கடல் வெள்ளத்துக்கு முன், குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த நாட்டில் நிறுவப்பட்டடதாகும். இச்சங்கத்தை நிறுவிய மனனர் காய்ச்சின வழுதிமுதல் கடுங்கோன் மன்னர் வரைனண்பத் தொண்பது மனனர் ஆவர்.

இச்சங்கம் நாலாயிரத்து நனூற்றி நாற்பது ஆண்டுகள் நடைபெற்றிருந்ததாகக் களவியலுரையிலும் ஆராய்ச்சியா லும் அறியக்கிடக்கின்றது. சங்கமிருந்தார் அகத்தியனார் முருகவேள் இவர்களுள்பட ஐநூற்றி நாற்பத்தொன்பதின்மர். அவர்கள் பாண்டியர்கள் சங்கதில் தலைமை வகித்துள்ளார் கள். அப்போது இயற்றப்பட்ட நூற்கள் பரிபாடல் முதுகு ருகு, மூறுநரை முதலியன. அவாகளுக்கு நூல் அகத்தியம் என்பது.

இடைச்சங்கம்.

இடைச்சங்கம் தொடங்குவதற்கு முன்னும் தலைச்சங்கத் தின் பின்னும் காட் எலியட் கூறிய ஐந்தாவது கடற் பெரு வெள்ளம் நிகழ்ந்திருக்கலாம். மன்னனுக்குப் பின் அடுத்த

விமலா

அல்லது

விதவையின் மறுமணம்.

P. S. Rajaram., G. M. (Dip) Madura

மாலை நேரம். 'சந்திர விலாஸ்' மாளிகை மிக மனோகரமாகவே விளங்கிற்று. அதன் தோட்டத்திலுள்ள மரங்களிலெல்லாம் அநேகவிதமான பறவையினங்கள் இனிமையான சப்தத்தை உண்டாக்கிக்கொண்டு யிருந்தன. புஷ்பச் செடிகளிலுள்ள அழகான பல நிறப்புஷ்பங்களின்றைய பௌர்ணமிச் சந்திரனின் வரவை நோக்கி மலர்ந்தன, எங்கும் சந்தோஷமே நிலவியது. ஆனால் அப்பாழுங்கிணற்றின் அருகில் உள்ள டனிங்குக் கல்லின்மீது தக்கமேவடிவாக அமர்ந்திருக்கும் பெண்மணியார்?

மன்னன் தொடர்ந்து சங்கத்தை நடத்திருப்பின் அதுவும் தலைச் சங்கம் என்றே பெயருடைத்தா யிருக்கும்.

கடைச்சங்கம்.

அவ்வவந்தாவது நடந்த பெருக்குக்குப்பின் பெரிதாகக் கருதப்படும் கடல் வெள்ளம் கி மு மூவாயிரத்து ஐநூற்றிற்கும், இரண்டாயிரத்து நூற்றைறதுக்குர் இடையே நடந்ததாகப் பெரும் புலவர்கள் கருதுகின்றனர். டெனண்ட் என்பவர் எழுதியுள்ள இலங்கைச் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ள நடந்த பெருக்கும் இதுவே போலும்.

கடைச்சங்கம் ஆயிரத்து தொண்ணூறு ஆண்டுகள் நிறை பெற்றிருந்ததாகத் தெரிகிறது அது கி பி. மூன்றாவது நூற்றாண்டில் முடிவுற்றதென்பது எவருக்கும் ஒத்ததாகும். ஆகவே, கி. மு. பன்னிரண்டாவது அல்லது பதினைந்தாவது நூற்றாண்டிலேயே கடைச்சங்கம் தோன்றியிருக்க வேண்டுமென்பர். இப்போது வழங்கப்படும் சங்க நூற்களில் பல கடைச்சங்கக் காலத்திலே இயற்றப்பட்டனவாகும்.

அவள் ஒரு இளம்விதவை; பெயர் விமலா பருவம் வந்த ஒரு அழகிய கங்கை; இளம் பிராயத்திற்குள்ளேயே மணம் செய்யப்பெற்றுச்சிறிது காலத்திற்குள்ளேயே, பதியை இழந்த பாவை. கணவன் இறந்த ஞாபகம் விமலாவுக்குக் கொஞ்சம் உண்டு. ஆனால் அந்த மரணத்தினால் தனக்கு நேரிட்ட மாறுதலை உணர்ந்து கொள்ளக் கூடிய பருவத்தில் அவள் அப்போது இல்லை. விமலா அண்ணன் பிரேமாஹரன் சீர் திருத்த வேட்கையாலேயே அவள் தலையில், குலாசாரத்துக் கு விரோதமாய், கூந்தல்விட்டு வைக்கப்பட்டிருந்தது.

அன்று காலையில் அவன் தன் அண்ணன் பிரேமாஹர னுடன் சிற்றுண்டி அருந்தும்போது, அவனுடையவாழ்க்கைத் துணைவி சுந்தரி, கைநிறையக் கமகமவென மணக்கும் மல் லிகைப் புஷ்பங்களைக்கொண்டுவந்து விமலாவைச்சூட்டிவிடச் சொன்னாள்.

அப்படியே விமலா தன் அண்ணியின் கூந்தலை அழகு படச் செய்தபின் சுந்தரி, விமலாவை நோக்கி, 'அம்மா, உனக் கும் நான் இன்று பூச்சூடிவிடப் போகிறேன்' என்றாள்.

'ஆ எனக்கா? விதவைக்கா? நான் புஷ்பம் தரிக்கஎன்ன உரிமை யிருக்கிறது? எனக்கு எதற்கு? ஏன், தரித்தால்என்ன? மாமி என்ன செய்துவிடுவாள்? யாராவது ஏதாவது செய்து விடுவதற்காகவல்ல. நான் பூத்தரித்துக் கொண்டு யாருக்குக் காட்டப் போகிறேன்.

விமலாவின் கண்களில் நீர் ததும்பியது விமலா எவ்வ ளவோ மறுத்தும், சுந்தரி விடாப்பிடியாய்ப் புஷ்பங்களை அழகாகச் சூட்டிவிட்டாள்.

சிறிது நேரத்தில் விமலாவின் தாய் அங்கு வந்தாள். விம லாவின் கூந்தலில் புஷ்பங்களைப்பார்த்ததும், 'இது யாரம்மா செய்தது? வேண்டாம் அம்மா, வேண்டாம். உன்னை பூச் சூட்டிப்பார்க்க வேணுமென்று ஆசைதான். ஆயினும் ஊரி லுள்ளவர்கள் தூற்றுவார்களே. கூந்தலை விட்டு வைத்த தற்கு என்ன எல்லோரும் தூற்றினார்கள். இன்னும் இத னால் வேறு அவமானம் சம்பாதித்துக்கொள்வதா?' என்று சொல்லிக்கொண்டே கூந்தலை அவிழ்த்து அதிலிருந்த புஷ் பங்களை எடுத்தாள். பின் கண்ணீர்விட்டுக்கொண்டே அவ்

விடம்விட்டு அகன்றாள். விமலா அன்று மாலை கண்ணீர் விட்டுக்கொண்டிருந்ததற்கு இதுதான் காரணமோ?

மறுநாள் காலை வழக்கம்போல் விமலாவின் தாய் எழுந்து வரும்போது, விமலாவின் அறை திறந்து கிடந்ததைக் கண்டதும் உள்ளே சென்றாள். உள்ளே விமலாவைக்காணவில்லை. கிழவி உடனே கலவரப்பட்டுக் கூச்சலிட்டாள். அவளுடைய கூச்சலால் வீட்டிலிருந்தோர் கலவரப்பட்டு விழித்துக்கொண்டனர். எங்கு தேடியும் விமலா அகப்படவில்லை. அன்று மாலை தோட்டத்திலுள்ள பாழுங்கிணற்றில் விமலாவின் பிரேதம் மிதந்தது. அவள் தற்கொலை செய்துகொண்ட இரவு தரித்துக்கொண்டிருந்த ஆடை யாபரணங்களே அப்பொழுதும் அவள் பிரேதத்தின் மீது காணப்பட்டன.

மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்து இரண்டு வருஷங்கள் ஆயின. விமலா விழுந்து இறந்த கிணறு மூடப்பட்டு அதன் மேல் ஓர் அழகிய சிறு கோவில் விமலாவின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. காலை ஆறு மணியிருக்கும் ஓருகூலி தள்ளாடித் தள்ளாடிநடந்துவந்து அந்தகோவிலினடியில் தான் கொண்டுவந்த புஷ்பங்களை வாரி இறைத்தாள். அந்தச் சமயத்தில் பிரேமாஹரன், (விமலாவின் அண்ணன்,) அவ்விடம் வந்தான். 'அம்மா' என்று கடுமையான குரலுடன் கூப்பிட்டான்.

கிழவி:- யார்? பிரேமாஹரனா?

'ஆம், நான் தான். என் தினமும் இங்கே வந்து புஷ்பங்களை வீணாக்குகிறாய்?

'பிரேமாஹரா என்ன அப்படிச் சொல்கிறாய்? என் பிரிய விமலாவுக்காக இது கூட நான் செய்யக்கூடாதா?'

'ஆகா, என்ன அன்பு! உயிரோடுயிருக்கும் வரை அவள் சந்தோஷமடைய மனமில்லை இரண்டு பூக்கூடத் தரிக்க விடமாட்டேன் என்று சொன்னாய்.

இப்போதோ தினம் தினம் புஷ்பங்களைக்கொண்டுவந்து சொரிகிறாய். உயிரில்லாததிற்கு மாதந்திரம் உன்னிடம் மதிப்பிருக்கிறது. உயிருக்கு மதிப்பில்லை. இப்போது உன் அன்பு வீணானது என்பதை இன்னும் நீ அறியவில்லையா?

இவ்வார்த்தைகள் கிழவியின் மனதைக் கூரிய ஆயுதங்களால் குத்துவனபோலிருந்தன. மனமுடைந்து அவள் அழுதாள்,

விமலா தாய் பிரவும் நோய்வாய்ப்பட்டுச்சமீபத்தில்தான் பூரண குணமடைந்தாள். அநேக டாக்டர்கள் கைவிட்டபின் ஓரே ஒரு டாக்டர் அவளைப் பிழைக்க வைத்தார். அவருக்கு நன்றி செலுத்துவதற்காக அன்றே ஓர் விருந்து வைக்கப்பட்டது. பிரேமாவரனின் பந்துக்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அன்று டாக்டர் ராஜாராமும் குடும்ப சகிதமாய் அழைக்கப்பட்டிருந்தார். எல்லோரும் டாக்டரின் வரவுக்காக அதிக ஆவலுடன் காத்திருந்தனர்.

கொஞ்ச நேரத்தில் 'டக், டக்' என்ற சப்தம் கேட்டது. புன்முறுவல் ததும்பிய வதனத்துடன் ஓர் கவராகரிக இளைஞர் உள்ளே நுழைந்தார். எல்லோரும் அவரை வரவேற்று வந்தனம செலுத்தினர். விமலாவின் தாய் அவரை நன்றி நிறைந்த பார்வையுடன், 'தங்கள் மனைவி எங்கே, காணவில்லை? என்று கேட்டாள்.

அச்சமயம் வெளியே ஒரு மோட்டார் வரும் சப்தம் கேட்டது.

கொஞ்ச நேரத்தில் நாணிக்கோணி ஒரு சிறு குழந்தையைக்கையில் பிடித்துக்கொண்டு ஓர்கவ நாகரிக மாது உள்ளே வந்தாள்.

ஆ! வந்தவள் யார்? ஏன் எல்லோரும் அவளை இப்படி உற்று நோக்குகின்றனர்?

கிழவி ஆச்சரியப்படும்படி 'அம்மா! இது உன்மகள் விமலா தான் அவள் கையில் பிடித்திருப்பது உன் பேரனே' என்றாள்.

தாயும் மகளும் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

மறுநாள் தினசரிப்பத்திரிகையில் 'உண்மை விளம்பி'யில் கிழ்கண்டவாறு சமாச்சாரம் வந்தது. 'மாண்டவன் மீண்டான். 'இரண்டுவருஷங்களுக்குமுன் ஜெனற்றில் விழுந்து

இறந்ததாகக் கருதப்பட்ட விமலா கேற்றுத் தன் சொந்த வீட்டில் தோன்றினாள். தன் சகோதரன் பிரேமாஹரனி னால் அவள் ரகசியமாக வெளியேற்றப்பட்டு, அவளுடைய ஆடை ஆபரணங்கள் தரிக்கப்பட்ட வேறு ஒரு அனாதைப் பிணம் தோட்டத்திலுள்ள பாழுங் கிணற்றில் போடப்பட் டது. விமலா அன்று இரவே பம்பாய்க்கு அனுப்பப்பட்ட தாயும், அங்கு ஒரு கிழவனால் போஷிக்கப்பட்டு அவள் தானைக் குணப்படுத்திய டாக்டர் ராஜாராமுக்கு மணம் செய்யப்பட்டதாயும் தெரிவருகிறது. விமலாவின் சகோத ரர் பிரேமாஹரன் மிகவும் பாராட்டப் படுகிறார். அத்தகைய சகோதரர் ஒவ்வோர் இளம் விதவைகளுக்கும் வாய்ப்பார் களா?

அல்பேனியாவில் விவாக விதிகாதம்.

அல்பேனியாவில் நடக்கும் விவாகங்களில் மணப் பெண் மணமகனிடம் பகிரங்கமாய் ஒரு சாட்டையைக் கொடுப்பது வழக்கம்.

அது மனைவியைக் கணவன் பலாத்காரமாக அடக்கித் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும் உரிமையைக் காட்டும் அடையாளமாம்.

விவாகச் சடங்கு முழுவதையும் பெண்ணின் தந்தையோ அல்லது தமையனோ தான் நடத்துவார். பெண் அப்போது மௌனமாகவே இருப்பாள்.

எகிப்தில் நடக்கும் விவாகங்களில் விவாகம் முடிவாகிற வரையில் மணப் பெண் மணமகனைப் பார்க்க முடியாது. மணச் சடங்குக்கு பெண்ணின் பிரதிநிதியாக ஒருவர் அனுப் பப்படுவார். விவாகத்திற்குப் பிறகுதான் மனைவி கணவ னைப் பார்க்க அனுமதிக்கிறாள்.

சுகாதாரம்.

(எஸ். கே. வி. முத்துராஜா தொட்டியது.)

1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

2. இருந்த காலுக்குச் சீக்கு, கடந்தகாலுக்குச் சுகம்.

3. கொறுக்க (நன்றாக மென்று) தின்றவன் நூறு வயதிருப்பான்.

4. சொறிந்து தேய்க்காத எண்ணெய் பாழ்.

5. மட்டான உணவு மனதுக்கு மகிழ்ச்சி.

6. தண்ணீரில் இறந்தவரிலும், சாராயத்தில் இறந்தவர் அதிகம்.

7. குழந்தைகளுக்குப் பயங்காட்டி சோறூட்டினால் சரியாக ஜீர்ணமாகாது.

8. திகிலல்லது கோபமோடிருக்கும் போது உண்ணாதிருப்பது நலம்.

9. தொற்று வியாதிகளைத் தடுக்க அம்மை குத்திக் கொள்.

10. வெந்நீரில் குளிர்ந்த நீரைவிட்டுப் பருகாதிரு.

11. உழைப்பில்லா உடல் உரங்கொள்ளாது.

12. மோரைப்பெருக்கி, நெய்யை உருக்கி, நீரைச் சுருக்கியுண்.

13. சூரியன் உதிக்குமுன் சுத்த நீரில் முழுகு.

14. உணவை ஒருபோதும் அவசரமாக விழுங்காதே.

15. உண்ணுகையில் நீர் குடிக்காது, உண்டபின் நீர் குடி.

16. உண்ணுபுணவு உமிழ்நீரோடு கலக்க நன்றாக மென்று தின்.

17. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.

18. பதுக்கையில் பதித்துக்கொண்டே படிக்காதிரும் பது நலம்.

19. இரவில் தயிர் சேர்த்தால் (உறங்கும் பொழுது) ஜீர்ணக்கருவிகளுக்குச் சக்தி குறையும். வேண்டுமென்றால் மோர் சேர்க்கலாம்.

20. வைத்தியருக்குக் கொடுப்பதை வாணிபருக்குக் கொடு.

21. எண்ணெய் விட்டுக்கெட்டது காது, விடாமல் கெட்டது கண்.

22. தயிரோடு பாலையும், தேனோடு நெய்யையும் எக காலத்தில் பருகாதிரு.

23. அசையும் வாகனங்களில் பிரயாணஞ் செய்யும் போது வாசியாதே.

24. உண்டவுடன் குளிக்கில் உணவு ஜீர்ணமாக தோஞ் செல்லும், சரியாகவும் ஜீர்ணமாகாது.

25. எண்ணெய் முழுக்கு வெக்ரீல் செய்; அன்று தயிர் சேர்க்காதிரு.

26. மற்றவர்களைக் கொண்டு எண்ணெய் தேய்க்கா மல் தேகம் பூராவும் எண்ணெய் படும்படி நீயே அழுத்தத் தேய்த்துக்கொள்.

27. தம் வயதின் மேலான மங்கையை மணக்காதிரு.

28. தொத்து வியாதி காலங்களில் தைரியம், பயமில் லை என்ற வார்த்தையை நினை.

29. உண்டவன் உரஞ் செய்வான் என்றிருந்தபோதி லும், உண்ட உணவு ஜீர்ணமாகும் அளவுக்கே தேகம் பல மடையும்.

30. தின்பதற்கென்று வாழாமல் வாழ்வதற்கென்று தின்.

31. ஆகாரத்தால் இழுக்கப்பட்டு உணவு உட்கொள்ளு தல் தகாது.

32. மாதத்திற் கிருமுறை பட்டினிகிட. இலங்கனம் பரம ஔடதம்.

33. வெறிதரும் பானங்களை அறவே நீக்கு.

34. காட்டேரி முனியனுக்கு கள் படைத்து சாமிக்குப் படைத்த தென்று அதை நீ குடித்து கெட்டுப்போக வழி தேடாதே.

35. ஊத்தை முற்றினால் சிரங்கு, வார்த்தை முற்றினால் வழக்கு.

36. இலைக் கறிகளாகிய கீரை இனங்களை இரவில் உண்ணலாகாது.

37, ஒவ்வொரு நாளும், பகல் உணவில் ஏதேனுமோர் வகைக் கீரை சேர்க்க வேண்டுமென்பது ஆரோக்கிய விதி.

38. காய் (கறி) கீரை இனங்களை வேகவைத்து சத்தைப் பிழிந்து விடுகிற பழக்கத்தை விடுத்து சத்துடன் சமைத்து உண்பதே உத்தமம்.

39. கோழிகள் தவிட்டை விழுங்குவது போல் சாதத்தையும் கறியையும் விழுங்காதே நன்றாக மென்றுதின்.

40. நோயாளியினிடம் பயந்து போன தன்மையை காண்பிக்காது தைரியத்தையும், அமைதியையும், பொறுமையையும் காண்பியுங்கள்.

41. நகங்களை அதிகமாக வளரவிவிட்டாலும் அழுக்குகள் அடைய இடங்கொடாமலும் சுத்தமாக வைத்துக் கொள்வது நலம்.

42. மூக்கினுள் இருக்கும் மயிரை சிமிட்டா போட்டு பிடுங்கினால் கண்பார்வை குறையுமென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

43, மூக்கினுள் போகும் தூசிகளை தடுக்க கத்திகொண்டும் மூக்கினுள் இருக்கும் மயிர்களை நீக்காதிருப்பது நலம்,

44. தலைக்கும் தோளுக்கும் நடுவில் எவ்வளவு உயரமிருக்கிறதோ அவ்வளவு தான் தலையணையின் உயரம் இருத்தல் வேண்டும்.

45. இடது பக்கமாகப் படுப்பது நலம்.

46. அழுக்குப்போக நன்றாய்த் தேய்த்து குளிக்கவேண்டுமே ஒழிய காக்கை முழுகுவதுபோல் தண்ணீரில் முழுகி எழுந்திருக்கக்கூடாது.

47. பல் விளக்கச் செங்கல்லையும் அடுப்புக்கரியையும் சாம்பலையும் உபயோகிக்காதிருத்தல் நலம்.

48 பற்களை வாரத்திற் கிருமுறை உப்புப் போட்டு விளக்குவது நன்று.

49. தேகாப்பியாசம் பலவகைப்படும். அது வயதிற் குத் தக்கவாறு படும்.

வயோதிகர் நடத்தல், வண்டி ஏறிச் சவாரி செய்தல் முதலியவற்றிலும், வாலிபர் கசரத்துச் செய்தல், தண்டால் பஸ்கி போடுதல், பந்தாடுதல் முதலியவற்றிலும், சிறுவர் குதித்தல், ஆடுதல், ஓடுதல் முதலியவற்றிலும் தேகப்பயிற்சி செய்ய வேண்டும்.

50. கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக்குடி.

51. பட்டினி இருப்பதினால் பிணிகள் பல நீங்குமென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். பலஹீனர் பட்டினி கிடத் தலாகாது.

52. சிலருக்கு மாந்திரீக சிகிச்சைகளால் வியாதிகள் நீங்குமென்ற நம்பிக்கையுண்டு. ஆனால்சரீரத்தாலுண்டான வியாதிகளைச்சரீரத்தோடு சம்பந்தப்படும் மருந்துகளாலன்றி வேறு வகையால் தீராதென்பது அநேக அறிஞர்களின் முடிந்த முடிவு.

53. ஒவ்வொருவரும், கூடியவரை சுகாதாரத்தைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

54. சுகாதார இலாக்காதாரர்கள் ஒவ்வொரு கிராமங் களிலும், பட்டணங்களிலும் சுகாதாரத்தைப் பற்றிய துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு அடிக்கடி வெளியிட்டுவரின் பெரிதும் நன்மை பயக்கும்.

55. விருந்து சாப்பாடு ஆரோக்கியத்திற்குக் கெடுதியை உண்டாக்கும் ஆகையால் அதில் மிதமாய் இருத்தல் நலம்.

56. நீந்துவது சரீரத்திற்கு நல்ல அப்பியாசமாகும்.

57. இரவில் நெடுநேரங்கழித்து தினமும் போஜனம் செய்யாதிருத்தல் நலம்.

58. துளசிச் செடியை வீட்டிற் கருகில் வளர்த்துவரு வது சுகாதார விதிகளில் ஒன்று.

59. உடுப்பது கொஞ்சமாயும், குளிப்பது அதிகமாயும் இருத்தல் நலம்.

60. வருஷத்தில் இருமுறை சுகபேதிச்சுச் சாப்பிடுவது நலம்.

61. நச்சுத்தீனி தின்னாமலும், வேளை தப்பி வேளை உண்ணாமலும் இருத்தல் நலம்.

62. நன்றாகச் சமைக்கபடாத உணவையும், ஊசிய உணவையும், ஏழைகளுக்கும், வேலைக்காரர்களுக்கும் போடும் வழக்கம் சில பணக்காரர்களுடைய வீட்டிலிருந்து வருகிறது. இப்படி சுகாதாரக் குறைவான உணவுகளை இட்டு தருமவான் என்று பெயர் தேடுவதிலும், கெட்ட உணவுகளை இடாமல் இருப்பது பெரிய தருமம்.

63. இரவில் பத்து மணிக்கு மேல் விழிக்காமலும் காலை ஆறு மணிச்சு மேல் படுக்கையில் இராமலும் இருத்தல் உத்தமம்.

64. குறைந்த வெளிச்சத்தில் வாசியாமலும், அடிக்கடி சினிமாவுக்குப் போகாமலும் இருத்தல் கண்களுக்கு நலம்.

65. அஜீர்ணமுண்டானால் பட்டினி இருப்பது நலம்.

66. பான வகை மூன்று, மதுபானம், தேப்பானம், நீர்ப்பானம். இவைகளில் நீர்ப்பானமே நன்மை பயக்கும்.

67. கள் குடித்துத் தானும் தனது சக்தியாரும் கெட்டுப்போவதைவிட மனிதன், ஆடு, மாடு, கழுதை முதலியவற்றின் மூத்திரத்தையாவது குடித்தால் சில வியாதிகள் நீங்குமென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

68. அதிக வெயிலில் நடந்து வந்து கால் சூடாக இருக்கும்போது உடனே தண்ணீரில் காலை வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் சீக்கிரம் கண் பார்வை குறையுமென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

மாந்திரீகம்.

(சார்லஸ் டி. கோர்ஹாம்)

இந்தப் பயங்கரமான விஷயத்தைப் பற்றி அதிகம் கூற வேண்டிய அவசியம் இல்லை. மக்களது முரட்டுத்தனமான மடமையாலும், "கடவுள் வார்த்தை" க்குப் பயம் என்பதாலும் மாந்திரீகம் முதலியன தோன்றலாயின. கொடுந் தேவதைகளில் நம்பிக்கையும், அவைகளிடம் பயமும் அனேகமாக எல்லா மதங்களிலும், முக்கியமாக கீழ்ப்பட்ட மனிதர்கள் அனுஷ்டித்துவரும் மதத்திலும் இருந்து வருகின்றன. ஆகவே கிறிஸ்துவ மதத்தைக் கைப்பற்றி அறிவு வளர்ச்சியுற்ற மக்களாவது இந்த மூட நம்பிக்கையை ஒழிக்க முயன்றிருக்க வேண்டும். ஆனால் கிறிஸ்துவ மதமோ அந்நம்பிக்கையை விட்டு வைத்ததுமல்லாமல் நமது மேன்மையான தன்மையைத் தாக்கும்படியான அளவுக்குத்தானே அதை மிகவும் கூரமான முறையில் கையாண்டும் வந்துள்ளது. கிறிஸ்துவாகளது பைபிளிலேயே அம்மதக்கர்த்தாவுக்கு கொடுந் தேவதைகளிலும், பைசாசங்களிலும் நம்பிக்கை இருந்துள்ளது என்பதாக எழுதப் பட்டிருக்கின்றது. இந்த மூட நம்பிக்கை பழைய வேதத்தில் கூறியுள்ள "நீ ஒரு மாந்திரீகனையும் உயிருடன் வைக்காதே" என்னும் கட்டளைப்படி இன்னும் அதிகக் கொடூரமாகக் கையாளப்பட்டு வந்தது. இதன் கொடுமையை மத்திய கால மதத்தினர் நன்கு உணர்ந்திலர். இந்தவிதமான தொந்தரவு, முதல் கிறிஸ்துவச் சக்ரவர்த்தியான கான்ஸ்டன்டைன் என்பவரால் பெரிதும் பெருக்கப்பட்டதுமன்றி, மந்திரவாதிகள் அனைவரையும் உயிரோடு சுட்டெரிக்க வேண்டுமெனவும் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. போப்பரசர்களால் பல "புல்" கட்டளைகள் உண்டாக்கப் பட்டன. அவற்றுள் பதினைந்தாம் நூற்றாண்டில் 1484-ம் வருடம் எட்டாவது இன்னசென்ட் என்னும் போப் விடுத்த கட்டளையே மிகவும் முக்கியமானதாகும். அடுத்த நூற்றாண்டில் டிரீவ்ஸ் என்னும் ஊரில் ஒரு சமயவாதிக்கு இந்த பைசாச நம்பிக்கை விஷயத்தில் ஐயங்கள் தோன்றின. ஆனால் அவர் உடனே சிறைத் தண்டனைக்குட்படுத்தப் பட்டதுமன்றி அவரது புத்தகமும் பறிமுதல் செய்யப்பட்டது.

பைபிளில் கூறியுள்ளது என்னும் ஒரே காரணத்திற்காக மாந்திரீகத்திலும் துஷ்டதேவதைகளிடத்திலும், நம்பிக்கைவைத்த மகாபெரியமனிதர்களுள் ரிச்சார்டு பாக்ஸ்டர், காட்டன்மேதர், அவருடைய தந்தையார், சர். தாமஸ்ப்ரௌன், ஜான்வெஸ்லி, ஹென்ரிமோர், ஜஸக்காலாபன், கட்வொர்த்களேன்வில், சர் மத்தேயுஹேல் போன்றவர்கள் சிலருண்டு. 1773-வது வருடம் ஒரு ஸ்காட்லண்டு திருச்சபை மாந்திரீகத்தில் நம்பிக்கையுண்டு என்று ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியது. "பிரான்க்ளின்" என்பவர் கண்டுபிடித்த "இடிதாங்கி" என்னும் இயந்திரம் வெற்றிபெற்ற பின்னரும்கூட அது கடவுளின் சித்தத்திற்கு மாறாகச் செல்லும்பாலதென அதைக் கண்டித்தனர். இவர் இத்தகையை விஷயங்களில் நிறைந்து போன குருமார்களின் எலும்பில் நம்பிக்கை வைப்பது உத்தமம் என்று எண்ணியிருந்தனர்.

இந்தக் கொடூரமான மூடநம்பிக்கையின் பலன்களை முற்றிலும் இங்கு குறிப்பிடல் முடியாத காரியமாகும். மாந்திரீகர்கள் பேய்களுடனும், குட்டிச்சாத்தான்களுடனும், கட்புக்கொண்டிருந்து மக்களைத் துன்புறுத்தி வந்தனர் என்று கருதப்பட்டுவந்தார்கள். இயற்கைக்கு மேலான சக்தியைத் தம் கைவசப்படுத்திக்கொண்டு அவர்கள் ஆடுமாடுகளை நாசஞ்செய்தும், பயிர்களை அழித்தும், கோய்களையும் தீய பருவங்களையும் செய்தும் பலவகையான தீமைகளை ஆற்றிவருகின்றனர் என்று மக்கள் கருதி வந்தனர். 1589வது ஆண்டிலேதான் டென்மார்க்கிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்புகையில் ஏற்பட்ட துன்பம்விளைத்த பெரும் புயற்காற்றுக்குக் காரணம் மாந்திரீகத்தன்மையேயென முதலாவது ஜேம்ஸ் எண்ணங்கொண்டது யாவருக்கும் தெரியும். இக்குற்றத்திற்காக ஒருபாவமும் அறியாத ஒரு டாக்டர் சித்திரவதை செய்யப்பட்டு இறுதியில் கொருப்பிற்கும் இரையாக்கப்பட்டார். இவ்வாறு செய்வதின் கருத்து அந்த துஷ்டதேவதையை நீக்குவதென்றாலும் அந்த மாந்திரீகன் மிகவும் குரூரமான வகையில் வேகவைக்கப்படுவதும் இயல்பாயிருந்தது. பழைய ரோமன் சட்டப்படிக்கு சித்திரவதை உண்டு. ஆனால் ஒரு அளவுக்குத்தான் அதைப் பிரயோகிக்கலாம். ஆனால் கிறிஸ்து மதமோ அத்தகைய அளவுகளை தூக்கி எறிந்து விட்டது. ஏனெனில் அதன் எண்ணப்படி மாந்திரீகர்கள் சாத்தானின் கைபலத்தோடிருப்பதால் அவனை மிகவும் கொடூரமாகவே தான் தண்டிக்க வேண்டும். அவனால்

ஆனதை அவன் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதே; இத் தகைய காசமுறைக்கு ஆளான மக்களின் தொகை கோடிக் கணக்காகும். அத்தகைய மக்கள் அனேகமாய் கிழவிகளே யாவர். அவர் தம் தொகையை கினைப்பதும் கஷ்டம்.

கிறிஸ்து பிறப்பதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரேயே கேசன் என்னும் கெட்டிக்காரா வைத்தியன் ஒருவன் பைத்தியம் என்பது மூளையை ஒட்டிய நோய் எனக் கண்டுபிடித்துள்ளான். ஆனால் கிறிஸ்துவ மதத்திலோவெனின் பைத்தியம் என்பது துஷ்ட தேவதைகளால் உண்டாவது என்று எண்ணப்பட்டது. இந்த நம்பிக்கைதான் லக்ஷக்கணக்கான மக்களை அநியாயப் பித்தராக்கி அவர்படும் துன்பத்தை அளவுக் கடங்காமற் செய்தது. இன்னும் விபரீதமான விஷயம் என்னவென்றால் இந்த மூடக்கொடூர நம்பிக்கையானது கடவுளின் வெற்றியைக்காட்டுகின்றது. கிறிஸ்து மதத்தின் சக்தியின்மையைக் காட்டவில்லை என்று மக்கள் எண்ணிவந்ததே யாகும். அந்தக் காரணத்தால்தான் அந்த நம்பிக்கை அவ்வளவு காலம் நீடித்து வந்தது. தற்காலம் தனிப்பட்ட சாத்தான் ஒருவனும், அவன் பட்டாளங்களும் உண்டு என்னும் நம்பிக்கையானது அவ்வளவு கொடூரமான தன்மையில்லாவிடினும் சிலரால் மேற்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. ஆனால் அவர்கள் அப்படிக்கொள்ளுவதால் நேரிடும் கேவல நிலைமையைக் கவனிப்பதில்லை. அவர்களது கர்த்தாவே இத்தகைய மூட நம்பிக்கையைக் கொண்டிருந்தார் என்பதையும்கூட யோசியாமல் லக்ஷத்தில் ஏதோ ஒரு சிலரை அவர் காப்பாற்றி விட்டதற்காக அவருக்குப்பலர் வந்தனம் அளிக்கின்றனர். இந்நம்பிக்கையின் பலத்தைக்காட்ட ஓரே ஒரு உதாரணம் காட்டுவோம். மண்டிபோட்டு சாமிகும்பிடாமல் எதோ ஒரு பண்டத்தை ஓர் பெண் தின்றுவிட்டதற்காக அவள பைசாசத்தால் பீடிக்கப்பட்டுள்ளாள் என்று பலர் நம்பினர். பின் அவள் அவ்வாறு அத்தின்பண்டத்தின் மேல் சைத்தான் உட்கார்ந்திருந்ததைக் கவனிக்கவில்லை என்று விளக்கவே ஒரு கருணை பொருந்திய புரோகிதர் தன்மந்திரத்தால் அப்பேயை ஓட்டி அப்பெண்ணையும் மன்னித்துவிட்டார்.

இத்தகைய மூடநம்பிக்கைகளுக்கு எல்லாவித ஆதாரமும் பைப்பிளில் கிடக்கின்றது. ஏதேனிலுள்ள பாம்பும், காடாரீன் என்னும் பன்றியும் சைத்தான்களே என்பதற்கு பைபிளில் ஆதாரமுண்டு. ஓர்சேவலானது ஓர்நாள்தன்னிடம்

ஒரு முட்டையை வைத்திருந்ததைக்கண்டனர். எனவே அது ஒரு பெரிய மாந்திரீகமான பிராணி என்றும், ஆபத்தை விளைக்கக் கூடியதென்றும், குற்றஞ்சாற்றப்பட்டு நீதிஸ்தலத்தில் விசாரணையும் செய்யப்பட்டது. மத்திய காலத்தின் அறிவு வளர்ச்சியின் நிலை பூச்சிபொட்டுகளைக்கூடக் குற்றவாளிகளெனக்கொள்ள இடம் கொடுத்தது. தான் உபன்யாசம் செய்துகொண்டிருந்தபோது உட்புகுந்து தொந்தரை செய்ததற்காக ஒரு ஈக்கூட்டத்தை அர்ச்-பர்னார்டு என்பவர் சபிக்கவே அவையனைத்தும் திடீரென உயிர் நீத்துக் கீழே வீழ்ந்துவிட்டன. போசுவாவுக்குச் சாத்தானிடம் வெகு நம்பிக்கையுண்டு. அதன் காரணத்தால்தான் ஒரு சாத்தான் இந்த உலக முழுமையுமே நாம் ஒரு கோலிக்குண்டைச் சுற்றுவதைப்போல சுழற்றி எறிந்துவிடக் கூடுமென்று அவர் கூறியுள்ளார். இத்தகைய அபரிமிதமான மூடநம்பிக்கைக்குக் காரணம் பைபிளில் இதற்கு ஆதாரம் பொதிந்து கிடப்பதேயாகும். மற்றும் பலர் சாத்தான் என்னும் ஒரு புருடனிடம் நம்பிக்கைகொண்டிருப்பதும் இதற்குக்காரணம். ஆதலால்தான் லூதர், கால்வின் போன்ற பெரிய சீர்திருத்தக்காரர்கள் கூட இந்த நம்பிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் பிற்காலத்தில், மான்டெயின், மேலிபிரான்ஷ், டிஅகஸ்ஸோ முதலிய பிரஞ்சு ஆசிரியராலும், அதன் பின் வந்த ஹாப்ஸ், ஷேப்ட்ஸ் பரி, முதலிய ஆங்கில ஏகதெய்வவாதிகளாலும் இதைப்பற்றி எழுப்பப்பட்ட சந்தேகங்களின் பயனாய் மக்களுக்குச் சற்று நல்லறிவு உதயமாயிற்று. சமயக் குருக்கள் கூட்டம் முழுதுமே பொதுவாகப் பழைய மூடநம்பிக்கையைக் கைவிடாமல் வந்திருக்கவைதீகராயிருந்த போதிலும் பிஷப் "பட்லர்" என்பவர் மட்டும் இவ்விஷயத்தில் உண்மை அறிவைப்பரப்ப வெகுவாக உழைத்துவந்தார். இவ்விஷயத்தில் வெஸ்லி கொண்டிருந்த சற்று மாறுபட்ட கொள்கை அதிகமாக வெற்றிபெறவில்லை. அவருடைய கொள்கை என்னவென்றால், சாத்தானால் சில நோய்கள் உண்டாக்கப்படுவது என்பது வாஸ்தவமே. ஆனால் அவ்வாறு சிற்சில சமயங்களில்தான் இயலும். ஆனால் சாத்தான் முதலியவைகள் உயிரோடிருக்கும் விஷயத்தைப்பற்றி அவருக்குச் சற்றும் சந்தேகமே இல்லை. இயற்கைக்கு மேலான உயிர்களில் அக்காலத்தில் இருந்த தீவிர நம்பிக்கையின் காரணத்தால் மந்திரவித்தைக்காரர் எனச் சந்தேகப்படப்பட்ட மக்கள்கூட, சித்

திரவதைக் கஞ்சி, தாம் மந்திரவாதிகளே என ஒப்புக்கொள் வதும் உண்டு. ஓர்கால் சில ஆட்களைக் கொலைக்களத் துக்கு அழைத்துச் சென்று நிறுத்தினர். அங்கு அவர்கள் சாத்தானே அந்த கடவடிக்கைகளில் பங்கெடுத்து உதவி பண் ணிற்றென்றும் அதற்குக் காரணம் அவர்களது வண்டிச்சக் காம் சேற்றில் புதைந்திடாமல் எடுத்து விட்டதேயாகும் என் றும் கூறினார்களாம். சமயவாதிகள், பைபிளிலே "ஓ மூடர் களாகிய கலேஷியன்களே! உங்களை மந்திரத்தால் கட்டிய வர்கள் யாரே?" என்று கூறப்பட்டிருப்பதாலும்; சைமன் மேகஸ் என்பவர் சமேரியா மக்களை மந்திரத்தால் கட்டுப் படுத்தி விட்டதாகக் கூறப்பட்டிருப்பதாலும், அத்தகைய குற்றங்கள் உலகத்தில் உண்டு என்று நம்ப ஏதுவாகின்றது என்று நம்புகின்றனர். பவுல் அப்போஸ்தலனே, "சாத் தானும் கூட அறிவுமிக்க தேவதையாக மாற்றப்பட்டுள்ளான் என்று கூறியிருக்கிறார். ஆதலால் வெளித்தோற்றத்தில் நன்றாக இருக்கக்கூடியவைகளைக் கண்டுமட்டும் சாத்தான் இருக்கமுடியாது என்று இயம்புதல் தவறு என்றும் பலர் எண்ணுகின்றனர்.

இதற்கிடையிலே, ஒன்பதாம் நூற்றாண்டிலே கூட லையன்ஸ் நகரத்து அகோபார்ட் எனும் ஆர்ச்பிஷப் ஒரு வர் பகுத்தறிவைப் பரப்பப் பாடுபட்டார் என்னும் விஷயம் நமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதே. "மூட்டாள்தனம் என் னும் கொடுங்கோலுக்குக் கீழ் இந்தத் துன்பகரமான உலகம் அடங்கிக் கிடக்கின்றது. முன்காலத்தில் எனைய மதத்தி னரும் கற்புவதற்கொவ்வாத கேவலமான விஷயங்களைக்கூட தற்காலம் அறிவுவாய்ந்தவர் எனப்படும் கிறிஸ்துவர்கள் நம்பி வருகின்றார்கள்" என்று இயம்பியுள்ளார். ஆனால் உல கமுழுதுமே மூட்டாளாயிருக்கும்போது ஒரேயொரு அறிவாளி என்ன செய்யமுடியும்?

மாந்திரீகர்களைப் பற்றிய நூல்கள் அனந்தம். பைபிளி லிருந்து வரலாறான கதைகளை இம்மூடநம்பிக்கைக்கு ஆதாரமாகத் தினந்தோறும் பலர் எடுத்துக்காட்டமுற்படு கின்றனர். "மந்திரத்தின் மணம்" என்று மெயின் ஹால்ட் எழுதியுள்ள நூலில் காணும் ருசிகரமானதும், பயங்கர மானதுமான கதைகளை ஒருவன் படிப்பானேல் மூன்று நூற்றாண்டுகட்கு முன்னர் மக்கள் மனத்தில் கிடந்த கிலே சத்தின் அளவையும், தினந்தோறும் கடவுளின் பயத்திற்

கஞ்சி விபரீதமான மூடநம்பிக்கையால் பீதியடைந்து வந்த மக்களின் கதியையும் அவன் அறிய ஏதுவாகும். அந்தக் கடவுளோ தனது வழிகளைப்பற்றி ஒருவருக்கும் உணர்த்தா மலே ஒழிந்து வந்தார் பாவம். "பைபிளுக்கும் அதன் கோட் பாடுகளுக்கும் என்னென்ன ஆதாரங்களும், சாட்சியங்களும் உள்ளனவோ அதே ஆதாரங்களும், சாட்சியங்களும் பேய் பிடித்தல் என்னும் நம்பிக்கைக்கும் உண்டு" என்று (என் சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா) பிரிட்டானி தேசத்தின் விஷய அகராதி என்னும் நூலில் 1797-வது ஆண்டிலுங்கூட எழுதப்பட்டிருப்பதை நோக்குபவர்க்கு சாத்தான் நம்பிக்கை அந்நாலத்தில் எவ்வளவு பலமுடையதாக இருந்திருக்கவேண் டும் என்பது நன்கு புலப்படும். மேலே அந்நூல் கூறுவது உண்மையே. எனெனில் பைபிளின் உண்மைகளைப்பற்றியே மக்கள் பல நூதனமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக் கின்றார்கள். கல்வியாளர்களுக்குச் சாத்தான் நம்பிக்கை என் பது தற்காலத்தில் கனவிலும் காணாத பொருளாய்ப் போய் விட்டது. ஆனால் திருச்சபை மக்கள்மட்டும் பைபிளில் நமக்கு எவ்வளவுகாலங்கள் தேவையோ அவற்றைக்கையாண்டு வருகின்றார்கள். இருந்தாலும் அந்த மூடநம்பிக்கை இன் னும் முற்றிலும் அழிந்தபாடில்லை. கிறிஸ்துவ மதத்தின் கீழான முறைகளை அனுஷ்டித்துவரும் சில கூட்டங்களில் இன்னும் "பேய் ஓட்டுதல்" என்னும் மூடப்பழக்கம் இருந்து வருவதாக நாம் அடிக்கடி கேள்விப் படுகின்றோம்.

மனிதனுடையவோ மிருகத்தினுடையவோ மலம் கையி லோ காலிலோ பட்டுவிட்டால் தண்ணீர் விட்டுக் கழுவி விடு கின்றார்கள் ஆனால், மனிதர்கள் சரீரத்தின் மேலோ அல்லது சரீரத்தின் மேல் இருக்கும் துணியின் மேலோ பட்டு விட்டால் குளித்துத் தீர வேண்டும் என்கிறார்கள். எனவே இவர்கள் மனிதத் தன்மையுள்ள மனிதர்களா?

* * *

எத்தக் காரியங்கள் ஒரு மனிதன் தான் அடிக்கடி செய்ய கினைத்ததும் மற்றவர்கள் அறியாதபடி செய்ததும் வேறு பல நிர்ப்பந்தங்களால் இச்சைக்கு விரோதமாய் செய்ய முடி யாமல் இருந்ததுமாய் இருக்கின்றனவோ, அத்தக்காரியங் களை மற்றவர்கள் செய்தால் அது எப்படிப்பட்ட காரியமா னாலும் ஒருக்காலமும் குற்றமாகாது. ஈ. வெ. ரா.

ஆண் வேடம் பூண்ட பெண்.

கிமாட் என்ற ஒரு பஞ்சி பெண்ணை காபர்கான் என்ற ஒரு கொலலனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டது. கிமாட்டுக்கு வயது பதினொன்று. விவாக மானதும் தம்பதிகள் இருவரும் டிங்கி என்ற கிராமத்தில் வசிக்கலாயினர்.

இவர்களுக்குச் சாந்தி முகூர்த்தம் ஏற்பாடாயிற்று. மாப்பிளையும் பெண்ணும் பனி அறையில் விடப்பட்டார்கள். காபர் அன்போடு தன்கட்டழகினையத் தழுது முத்தமுடச்சென்றான். ஆனால் கிமாட் தன னணவனின தாடியைபபிடித்துக் கொண்டு தன்னை தீண்டினால் அவன் மூக்கை கடித்து விடுவதாக பயமுறுத்த ஆரம்பித்தாள். பார்த்தான் மாப்பிள்ளை. ஒன்றும் தோன்றவில்லை. திடகாத்திரமான திரேகமுள்ளவனா யிருந்தும் அச்சமயத்தில் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. மனக்குழப்பத்தால் அப்படியே ஆயிற்றான.

கிமாட் உடனே ஒரு வாலிபனைப் போல் உடைதரித்து கமால் என்ற பெயரோடு வெளியேறி விட்டாள். பல ஊர்களில் சுற்றித் திரிந்தான். முடிவில் ஒரு கிராமத்தில் ஒரு ஆடுமேய்க்கும் வேலையில் அமர்ந்தான். இந்தத்தொழில் பிடிக்கவில்லை. எனவே மூல்டானுக்கு சென்று அங்கு ஒரு கூலி வேலையில் சேர்ந்தான. வீரச் செயல்களை விரும்பும் இப்பெண்மனிக்கு இந்த வேலையும் பிடிபடவில்லை. சிபி என்ற நகருக்குச் சென்றாள். அங்கு ஒரு கட்டிட கான்டிராக்டரிடம் கழுதை வண்டி ஓட்டும டிரைவராக சேர்ந்தாள். இவள் இந்த தொழிலில் சந்தோஷமாகவே காலம் கழித்து வந்தாளெனினும் அடிக்கடி தான் ஒரு பெண் என்பதை பிறர் அறிந்துகொள்வார்களோ என்ற பயம இருந்து வந்தது.

கல்ல யெனவனம்; புன் சிரிப்பு தவழும் முகம். வசீகரமான தோற்றம். இது யாரைத்தான் மயக்காது. கிமாட்

கிராமத்திரங்களில் தன் வண்டியை ஓட்டிக்கொண்டு போகும் போது அங்குள்ள இள கன்னைகளின் மோகப் பார்வைக் கண் இவன்மேல் படும். கிமாட்டும் புன்னைகபோடு அவை களை அங்கீகரிப்பான். சில சந்தர்ப்பங்களில் இவன் அழகில் மதிமயங்கிய சில மங்கைகள் இவனை கட்டிக்தழுவி முத்த மிடுவார்கள். அவைகளுக்கெல்லாம் கிமாட் ஆண்களைப் போல மிக கம்பீரமாக திரும்பி முத்தமிட்டு அவர்களை ஓரு வாறு திருப்தி செய்வாள்.

கட்டிட கான்றாக்டரிடம் கமாலின் ஒப்பந்தம் முடிந்தது. எனவே அவன் ஹாராணி என்ற ஈகருக்கருத்த குர்மி என்ற கிராமத்தில் சையத் என்ற மற்றொரு காண்டிறாக்டரிடம் வேலையில் சேர்ந்தான். சிலவருடங்கள் இங்கு சேவை புரிந்துவிட்டு அதே உளரில் மற்றோர் காண்டிராக்டரிடம் சேர்ந்தான். சையதின் மனைவி ஒரு இளவயதுடையவள், கமாலின் அழகிய தோற்றம் அவளுடைய மனதைக்கொள்ளை கொண்டது. தன் புருஷனிடம் வேலையிலிருந்த கமால் வேலையைவிட்டு போனது முதல் கய்மான் என்ற இவருக்கு மன நிம்மதி இல்லை. கமால் என்ற பெண் யுவனை எப்படி யும் அடையவேண்டுமென்று சையதிடம் விவாகரத்து செய்துகொண்டு, ரயில் பிரயாணம் செய்துகொண்டிருக்கை யில், கமாலைச்சந்தித்தாள். இவருடைய காதல் மொக்கு பூக்கிக்க ஆரம்பித்தது. தன்எண்ணத்தை கமாவிடம் வெளி யிட்டாள். கமால் இந்த சங்கடமான நிலைமையிலிருந்து தப்ப வழியில்லை எனவே இருவரும் சந்தோஷமானார்கள்!

கய்மான் தன் காதலனான கமாவிடம் அளவுகடந்த பிரியம் கொண்டிருந்தாள். கமாலும் அதற்குப் பாத்திரமாக இருந்து வந்தாள். இவ்வாறாக பல வருடங்கள் கழிந்தன.

இந்நிற்க, மானிக்டுடார் என்ற வருவலுக்கு கமால்என்ற ஒரு மகன் இருந்தான். இவன் சில வருடங்களாகக் காணாத தால் தகப்பன் இவனை உளர் உளாக தேடிக்கொண்டிருக்கி றான். கெய்மாலும் பெண் கமாலைக்கண்டு, கமாலைத்தன் காணாமல் போன மகனைப்போல பாவிப்பதாகச் சொல்லி அழைத்துச் சென்று அவனைத் தன் சொத்துக்கு அதிபதி யாக்குகிறான்.

'கெய்மால், கமால் அடிக்கடி வீட்டுக்கு வராததைக் கண்டு கர்சானி என்ற மற்றொருவன் மேல் கட்புகொண்டு

அவனோடு வெளிக்கிளம்புகிறாள். இதைக்கமால் கையோடு பிடித்து தன் காதலியைத்திருடிக்கொண்டு போவதாக கர்சானி மீது வழக்கு தொடர்கிறான். வழக்கு முடிவில் சமாலுக்கு கொஞ்சம் பணம் கொடுத்து சமாதானம் செய்து கொள்ளப்படுகிறதெனினும், கமால் கெய்மாலோடு விவாகரத்து செய்து கொள்கிறான்.

காதல் தீ வாழ்கையில் சிலகாலம் கழிந்ததும், கர்சானி, கெய்மாலை அனாதரவாய் விட்டுவிட்டு காலமாய் விடுகிறான். கெய்மால் மறுபடியும் கமாலை அடைகிறாள். கமாலோ மனம் கோணாது இவளை வற்றுகொள்கிறான்.

இப்போது அதாவது 1919-ம் வருஷம் 'மாரி' கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. கமால் மெயில் சார்டர் வேலையில் இருக்கிறான். ஒருநாள் சிபியில் இருந்து ஹரானிக்குச் சென்ற ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் 300 மலைவாசிகள் ரயிலை நிறுத்தி அதைகவிழ்த்துவிடுகிறார்கள். இதனால் பலர் உயிர்ச்சேத மடைகிறார்கள். கமாலுக்கு பலத்த ஊனங்களேற்படுகிறது. இவனை ஹராலு மில்டேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்தார்கள். அப்போதுதான் கமால் ஆண் அல்ல, பெண் என்று தெரிய வருகிறது. ஆயினும் இப்பெண் ஆண்வேடம் பூண்டு கலவாத்தில் சேவை புரிந்து அதனால் ஊனமடைந்தாள். எனவே இவளுக்கு ரூ. 11-உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். இப்பெண்ணுக்கு விவாக இன்பம் என்னவென்று இன்னும் தெரியாது.

★ கல்வி பயிற்சி ஆரம்பம் ★

(இங்கர்ஸால்)

நாம் உண்மையாக நடப்போமாக! நமது ஆத்மாவின் நேர்மையை நாம் காப்பாற்றுவோமாக! தொட்டிலிலேயே— அன்பார்ந்த தாயின் மடியிலேயே கல்விப் பயிற்சி ஆரம்பமாகட்டும். தொட்டிலே — தாயின் மடியே முதல் பள்ளிக்கூடம். இந்தப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியையான தாய் மிகவும் உண்மைப் பற்றுடையவராயிருக்க வேண்டும். சிறு பொய்களை சாதாரண பொய் மூட்டைகளுக்குத் தாயகமாயிருக்கக் கூடாது.

முதன் முதலில் பெற்றோர் தான் உண்மைப் பற்றுடையவர்களாயிருக்க வேண்டும். தமது அறியாமையை அவர்கள் மறைக்கக்கூடாது. அறியாமையை ஒப்புக்கொள்வது கௌரவக் குறைவுமல்ல. உண்மையென நிரூபிக்கக் கூடாதனவைகளை உண்மையெனப் போதனை செய்யவே கூடாது.

சந்தேகங் கொள்ளவும், விசாரணை செய்யவும், காரணங் கேட்கவும் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு ஆத்மாவும் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; பொய், வஞ்சனை தவறு முதலியன ஆத்மாவைச் சாராமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நம்பிக்கைக்குப் பாத்திரமான மதாச்சாரியர்களிடம் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

தமது சந்தேகங்களைத் தைரியமாக வெளியிடக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். மூளையை விருத்தி செய்து ஜ்புலவுணர்ச்சியை வளர்ப்பதே கல்வியின் நோக்கமாயிருக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒரு மனப் பயிற்சிச் சாலையாகும்.

ஜீவிதப் போராட்டத்துக்குரிய சாதனங்களை யெல்லாம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திலே பெறவேண்டும். ஆராய்ந்து பாராமல் நம்புவதும், மூடப்பணிவும் அடிமைகளின் குணம்; இவைகளால் சுதந்தரார்களும் அடிமைகளாகிவிடுவார்கள்; ஆராய்ச்சி செய்ய முடியாதபடி—மக்கள் உணரமுடியாதபடி

புனிதமானது எதுவுமில்லை யென்பதை எல்லோருக்கும் போதனை செய்ய வேண்டும்.

திருச்சபைகள், மதாச்சாரியர்கள், மதாச்சாரங்கள் மத நூல்கள் என்ன சொன்னாலும் சரி, உண்மைக்குத் தடையாகவிருப்பவைகளை யெல்லாம் ஒழித்து பகுத்தறிவுக்கு ஒத்தபடி ஆராய்ச்சி செய்ய ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

இயற்கை நூல்.

பிரமாண்டமான இயற்கை நூல் எல்லோருக்கும் திறந்து இருக்க வேண்டும். அறிவாளிகளுக்கும் சத்திய வாதிகளுக்கும மட்டுமே அந்த இயற்கை நூலை வாசிக்கமுடியும். துரபிமானம் உடையவர்களுக்கு அந்நூலின் ஒவ்வொரு பக்கமும் இருள் மயமாகவே இருக்கும். மோசக்காரர் அந்நூலைப் படித்துத் தப்பர்த்தம் பண்ணுவார்கள்; குருட்டு அப்பாவிகள் அந்தத் தப்பர்த்தங்களை நம்புவார்கள். குருட்டு நம்பிக்கையுடையவர்களுக்கு அந்நூலில் ஒரு வரியையாவது வாசிக்கவும் முடியாது; ஒரு வார்த்தையையாவது உச்சரிக்கவும் முடியாது. எனினும் அந்நூலில் எல்லா அறிவும் எல்லா உண்மைகளும் அடங்கியிருக்கின்றன; சிந்தனைக்கும் அதுவே ஊற்றுக்கண்ணாகும். இந்நூலைப்படிக்க எல்லாருக்குமுள்ள உரிமையே மனச் சுதந்தரம் எனப்படும். இந்நூலைப் பொறுத்தவரையில் அரசனும், ஆண்டியும் சமமே. ஒவ்வொருவரும் இந்நூலை சுயமாக வாசித்து சுயமாக அபிப்பிராயம் கூறவேண்டும். தாம் படித்தவைகளை யாவருக்கும் தைரியமாகவும், சரியாகவும் கூறவேண்டும்.

அந்நூலுக்கு திருச்சபைகளிலோ மதாச்சாரியார்களிடத்திலோ மேற்கோள் கிடையாது. இயற்கையே—நாம் அறிந்த உண்மைகளே—அந்நூலின் மேற்கோள். உண்மை, அறிவற்றவர்களின் எஜமான் — சத்துரு; அறிஞர்களின் அடிமை—கணபன.

அறியாமை—இரகசியம், துன்பம், குருட்டு நம்பிக்கை சங்கடம், அழிவு, வறுமை இவற்றின் தாயகம்.

அறிவே, ஏக ஒளி. ராஜபாட்டைகளில் நடக்கவும், மேடு பள்ளங்களைத் தாண்டவும், இயற்கை சக்திகளை யுணரவும் அந்த ஒளி நமக்கு உதவி புரிகிறது. மனித சமூகத்தை உயர்த்துவதற்கு அறிவே தகுதியான ஏற்ற மாம். மூளையை வளர்ப்பது உலகத்தை காகரீகப் படுத்துவதாகும். அறிவு பேய் பூதங்களை வெருட்டி ஓட்டும்: இருள் மயமான பிரதேசங்களை ஒளிமயமாக்கும்; அச்சத்தை ஒழிக்கும்; ஆண்மையை வளர்க்கும்.

இயற்கைக்கு அதீதமான ஏதோ ஒன்று இருப்பதாகக் கூறுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று எல்லோருக்கும் போதிக்க வேண்டும். மரச்சிலை முன்போ, கற்சிலை முன்போ வணங்குபவன் ஒரு கற்பனைக் கடவுளை வணங்குபவனைப் போலவே மூடனாவான். அம்மாதிரிவணக்கங்களுக்குத் தட்பெண்ணமே காரணம். கடவுள்கள், பேய்கள், பிசாசுகள், பூதங்களில் நம்பிக்கை வைப்பதும் மூடத்தனமாகும்.

இயற்கைச் சக்திகளை வழிபாடுகளினாலோ, பூசைகளினாலோ, பிராத்தனைகளினாலோ, காணிக்கைகளினாலோ ஹோமங்களினாலோ, யாகங்களினாலோ அடக்கவோ மாற்றவோ முடியாதென்று எல்லாருக்கும் நற்போக்க வேண்டும்; மந்திரங்களும், அற்புதங்களும் இல்லையென்றும் வற்புறுத்த வேண்டும். சக்தியை சக்தியினாலே அடக்க முடியுமென்றும் பிரபஞ்சம் இயல்பாயுண்டானதென்றும் எல்லாருக்கும்சொல்ல வேண்டும்.

உண்மை மதம்.

மக்களுக்குப் பிரயோஜனமானது எதுவோ அதுவே உண்மை மதம்; மடாதிபதிகளும், குருமாரும், சன்யாசிகளும், புரோகிதர்களும் உலகத்துக்கு-மக்களுக்குப் பிரயோஜனமே இல்லை. அவர்கள் எதுவும் உண்டு பண்ணுவதில்லை. பிறர் உழைப்பினாலேயே அவர்கள் உயிர் வாழ்கிறார்கள். அவர்கள் பயந்தவர்களை அரித்துத் தின்னும் புல்லுருவிகளாகும். அவர்கள் உண்மையுழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சும் பூதங்களாகும். ஒவ்வொரு திருச்சபையும்—மடமும் ஒவ்வொரு பிச்சைக்காரர் கூட்டமே. கட்டாயப்படுத்தியும்—பயமுறுத்தியும் வாங்கும் தர்மத்தினாலேயே அவர்கள் காள் கழிக்கிறார்கள். பிச்சை கொடுப்பவர்களுக்குச் சுவர்க்கமும் கொடாதவர்

களுக்கு சுகமும் கிடைக்குமென்று எல்லா மதங்களும் கூறுகின்றன. "கடவுளை நம்பி தானங்கொடு" என்றே எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன. இது மதத்தின் போல் கடத்தும் கொள்ளையே.

உலகத்திலே இப்பொழுது ஒரு புது சகாப்தம் உதயமாகிறது. உலகத்துக்கு உபயோகமானதே சிறந்த மதம் என்ற உண்மை இப்பொழுது சமக்குப் புலனாகிறது.

காடுகளை அழித்து காடாக்கிப் பயிரேற்றியவர்கள், நதிகளுக்குக்குறுக்கே அணைகட்டியவர்கள், பாலங்கள் போட்டவர்கள்—கால்வாய்கள், ரயில் பாலங்கள் கண்டவர்கள்—கப்பல் கட்டியவர்கள்—யந்திரங்கள்நிர்மாணம் செய்தவர்கள். தந்திகள், கம்பியில்லாத் தந்திகள், மின்சார விளக்குகள் கண்டுபிடித்தவர்கள்—தறிகளையும் கதிர்களையும் உண்டாக்கியவர்கள்—அறிவை வளர்க்கும் அச்சுயந்திரம் செய்தவர்கள்—மற்றும் சமக்கு உபகாரமான பல உபகரணங்களை சிருஷ்டித்தவர்கள், நோய்களை ஒழித்து ஆயுளை நீட்டிய டாக்டர்கள், வானமண்டல உண்மைகளை அறிந்த வான சாஸ்திரிகள். பிரபஞ்ச உண்மைகளை வெளிப்படுத்திய தத்துவ சாஸ்திரிகள், விஞ்ஞான சாஸ்திரிகள்—ஆத்மாவுக்கு மகிழ்ச்சி யூட்டும் கவிபாடிய புலவர்—அழகிய சித்திரங்கள் அமைத்த சித்திரக்காரர்கள்—பிரதிமைகள் உண்டுபண்ணிய சிற்பிகள்—கைத்தொழில் முதலாளிகள்—உண்மைக்காகப் போராடும் போர்வீரர்கள்—ஆகிய இவர்களே மக்களுக்குத் தேவையான குருமார்களாகவும் ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள். விஞ்ஞான சாஸ்திர வெற்றிகளே நாம் கண்ட அற்புதங்கள்; இயற்கை உண்மைகள் அடங்கிய நூல்களே நமது வேதங்கள். அணுவிலும், நட்சத்திரத்திலும் தோன்றி வளர்ந்து பெருகும் ஒவ்வொன்றிலும்-சிந்தித்து, நம்பி, கஷ்டப்படும் அனைத்திலும் அடங்கியுள்ள சக்தியே கடவுளாகும்.

ஆகியந்தமில்லாத ஒன்றை நம்மால் அறிய முடியாது. இயற்கை யுலகத்தைத் தாண்டி நமக்குச் செல்லவும் முடியாது. நம் சக்கு எட்டக்கூடியவைகளையே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். நமது கடமைகளை யெல்லாம் இந்த உலகிலேயே நாம் செய்து முடிக்க வேண்டும். நாம் தேடிப்போம்; உழைப்போம்; காத்திருப்போம்; வேலை செய்வோம். தைரியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கப் பழகுவோமாக. கல்வி

காற்றையும் நீரையும் அடக்கலாம்.

நமக்கு முக்கியமாய்த் தேவையானவை எவை?

இயந்திரங்களே எவற்றையும் விட நமக்கு மிகவும் முக்கியமாய்த் தேவையானவையாகும்.

எந்த முயற்சிக்கும், எந்த கைத்தொழிற் சாலைக்கும் இயந்திரங்கள் வேண்டும்.

ஆனால் ஒரு இயந்திரம் செய்யவேண்டுமானால், நமக்கு உலோகம் வேண்டும்.

ஒரு இயந்திரத்தை இயக்கவேண்டுமானால் சக்தி வேண்டும். சக்தி என்பது என்ன? அது எங்கிருந்து வருகின்றது?

அது நம்மைச் சுற்றிலும் நிறைந்து இருக்கின்றது. காற்றின் வேகம் விசைகொண்ட சக்தியேயாகும். நீர் வீழ்ச்சியின் பலமும் சக்தியேயாகும். ஒவ்வொரு நிலக்கரித் துண்டும் விசை கொடுக்கத்தகுந்த சக்தியே யாகும். நாம் அடிப்பிடிக்கும் ஒவ்வொரு கட்டையும் விசையேயாகும். காற்று, நீர், கரி, கட்டை முதலியவற்றிற்கு உயிர் இல்லாதிருக்கலாம். ஆனாலும் அவற்றை நன்றாக வேலை வாங்கிவிடலாம் அவற்றால் ஒரு இயந்திரத்தின் சக்கரங்களைச் சுற்றுமாறு செய்யலாம். பக்கு என்ற இடத்தில் காற்றானது, ஒரு காற்றாடி இயந்திரத்தின் சிறகுகளை ஓட்டுகின்றது. அதனால் அந்த இயந்திரம் மண்ணுக்குள்ளிருக்கும் எண்ணெயை வெளியே இறைக்கின்றது.

விஷயங்களில், உண்மையான விஷயங்களில் நமது சிந்தனையைச் செலுத்துவோமாக. நாம் சுதந்திரவாழ்வு வாழ்வோமாக. எதிர்காலம் எல்லோருக்கும் சாந்தியையும் மகிழ்ச்சியும் தருமென்று நம்புவோமாக. இவை யாவற்றிற்கும் மேலாக நமது ஆத்மாவின் புனிதத் தன்மையைக் காப்பாற்றுவோமாக.

வரள் காவ்ஸ்ட்ராய் என்ற இடத்தில், நீர், சில நீர் இயந்திரங்களின் சக்கரங்களை இயக்குகின்றது; அதனால் மின்சார விசை உண்டாக்கப்படுகிறது.

ஒவ்வொரு இரயில் இஞ்சனிலும் விலக்கரி, நீரை ஆவியாக்குகின்றது. இந்த ஆவி இஞ்சினை ஓட்டுகின்றது.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், இயந்திரங்களுக்கு வேண்டிய விசையைப் படைப்பதே நம் முதற்கடமை என்பதாம்.

காற்று நமக்கு என்ன அளிக்கலாம்?

மாஸ்கோ நகரில், வான்ஸென்ஸ்கித் தெருவில், ஒரு புதுமையான கட்டடம் காணப்படுகின்றது. அதிலிருக்கும் புதுமை எல்லாம் என்னவென்றால், அதன் வலப்பக்கம் பெரிய கோபுரமொன்றிருக்கின்றது. இது சதுரமாகவும், சாளரங்களற்றதாயும் இருக்கின்றது. இதற்கு மேலே மற்றொரு கோபுரம் எழுகின்றது. இது இருப்புச் சட்டத்தில் கண்ணாடிச் சுவர்களாலானது. இந்த இரண்டாவது கோபுரத்தின் மேலுச்சியிலே, ஆகாயக் கப்பல் போன்ற உருவமுடைய ஒருவிதக்கருவி சுற்றிக் கொண்டிருக்கின்றது. இது வேகாற்றால் இயங்கும் இயந்திரங்கள் செய்யப்படும் மத்திய காற்றியக்கக் கழகம் என்பதன் ஒரு இலாகா நிலைபெறுமிடமாகும். இண்டாவது கோபுர நுனியிற் சுற்றிக் கொண்டிருக்கின்றதுவே, அது தான் கழகத்தாரால் சோதனை செய்யப்படும் ஒரு புதிய காற்றுக்கருவி.

இத்தகைய காற்றுக் கருவிகளை நம் நாடெங்கணும் நாம் நிலைபெறச் செய்வோமாயின், நாம் இன்று உலகம் முழுவதுக்கும் வேண்டப்படும் விசையைவிட மிகுதியாகப் பெற முடியும். காலஞ்செல்லச் செல்ல, தேவையும் அதிகரிக்கும் எனபது உண்மையே. அப்பொழுது எங்கெல்லாம் காற்று வேகமாக அடிக்கின்றதோ, அங்கெல்லாம் காற்றாடி இயந்திரங்கள் அமைக்கப்படும். நாடு முழுவதுமே ஒரு மின்சாரக் கம்பி வலையால் மூடப்படும். அப்பொழுது காற்று மின்சார நிலையங்களனைத்து மன்றியே, ஏனைய மின்சார நிலையங்களும் இந்த வலைக்குள் இயங்கும். ஒரு சதுரங்கப் பலகையில் சோழிகள் அடுக்கப்படுவது போன்று, நாடெங்கும் முறையே காற்றாடிக் கருவிகள் நாட்டப்பெறும். அவைகள்

காட்டுவதிலே ஒரு ஒழுங்கு இருக்கவேண்டும். ஒன்றை யொன்று தடைசெய்யலாகாது. ஏனெனில், காற்றும் ஒளி யைப்போல் நிழல் தருகின்றது. எனவே ஒரு காற்றாடி இயந்திரத்தின் காற்றாடி இயந்திரம் நிலைக்கப் பெற்றின், பின் னது இயங்காது போய்விடும். காற்றில்லாத அமைதிக் காலத்திலும் காற்றாடி இயந்திரங்கள் இயங்கவேண்டி, காற் றைச் சேமித்து வைக்கும் தனி நிலையங்களும் கட் டப்படும்.

ஆனால் இவையெல்லாம் வருங்கால ஐந்தாண்டுத் திட் டங்களில் செய்யப்படும் வேலைகளாகும். ஆனால் இந்தத் திட்டங்களில் கீழ்க்கண்ட முயற்சிகளே எடுத்துக் கொள்ளப் படுகின்றன. கிராமங்களிலிருக்கும் பழமையான விசை குறைந்த காற்றாடி இயந்திரங்களை எடுத்துவிட்டு மத்திய காற்றியக்கக் கழகத்தாரால் செய்யப்பட்ட, புதுமாதிரியான இயந்திரங்களை அமைப்பது. பின்னர் ஐந்தாண்டுகளுக்குள் கம்முடைய காற்றுக் கருவிகளுடைய விசையை 500 ஆயிரம் குதிரை வேகத்துக்குக் கொண்டு வருவது.

கதியோடு யுத்தம்.

காற்றினை வெற்றிகொள்வது கடுமையான தொரு பணி. நீரினை வெற்றிகொள்வது, அதனிலும் கடுமையானதாகும்.

கம் மலைகளும், சமவெளிகளும் நமக்கு வாளமான நதி களைத் தருகின்றன. இந்த ஆறுகள் $6\frac{1}{2}$ கோடி குதிரை வேகங்கொண்ட மின்சார விசையை நமக்கு அளிக்கக்கூடும். ஆனால் அவற்றை நமக்குப் பயன்படும்படியாகச் செய்து கொள்ளப் பண்ணுவது அத்தனை எளிதான காரியமன்று. வனவேடன் எவ்வாறு விலங்குகளோடு போராடிப் பழக்குகிறானோ, அதுபோல மனிதனும் ஆறுகளோடு போர்புரிய வேண்டும். கணமேனும் கவனக் குறைவாக இருப்பின், எப்படி விலங்கு அவன்மேல் விழைந்து பாய்ந்து கிழித்து அழிக்குமோ அதுபோன்ற கஷ்டமடைய நேரும்.

நீப்பரிலே, பெரியதொரு மின்சார நிலையம் கட்டப்படு கிறதென்று நாம் எல்லோரும் படித்திருக்கிறோம்; கேட்டிருக் கிறோம். சோவியத் கூட்டுறவு காட்டிலே நீப்ராஸ்ட்ராய் என்ற இடத்தைப்பற்றிக் கேள்விப்படாதார் எவருமே இரார்.

எனினும் அங்கே ஈனிதர்கள் ஆற்றோடு புரியும் போர் எத் துணைக் கொடியதென அறிபவர் வெகு சிலரே.

ஆற்றிலே ஒரு அணை கோலி, தகுந்த நீர் இயக்கிரங் களை அமைத்து, அதன் சக்கரங்களை இய்க்குமாறு நீரைப் பாய்ச்சுவதென்பது, பலருக்கு மிக எளிதானதொரு செயல் போலத்தோன்றும். ஆனால் இது சொல்வதுதான் எளிதே தவிர, செய்வது மிக வருத்தம். ஏனெனில் நீப்பரில் கட்டப் படும அணையானது, ஒரு கிலோமீட்டர் நீளமும், பல மாடி களைகொண்ட ஒரு வீட்டின் உயரமும் பெறற சுற்சுவரைப் போன்ற தொன்றாகும். இத்தகைய ஒரு சுவரை நிலத்தில் எழுப்புவதென்றால், அது எளிதானதல்ல. ஆனால் இங்கோ ஒரு போராற்றின் குறுக்கே கட்டப்படவேண்டும்! ஆறோ அமைதியாக நிற்க மறுத்து விடுகின்றது; அது தன் உரிமைப் போக்குக்குத் தளையிடுவதை வெறுக்கின்றது.

ஆறே, நில் அங்கே!

நீப்ராஸ்ட்ராயிலே வேலைகளெல்லாம் ஆற்றின் அடிப்பு றத்திலே, வெட்டைவெளியிலே, நடைபெறுகின்றன. அங் நுனமாயின், வேலையாட்கள் எங்ஙனம் நீப்பர்தகியை நிறுத் திவைத்தனர்? எனனில், 'ஆறே, நில் அங்கே' என்பது ஒரு புராணக்கதையில் தான் நிகழ்கின்றது.

அவர்கள் அதைஎன்வாறு முடித்தார்களென்றால், முதல வதாக, ஆற்றின் ஒரு பகுதியை மரக்கட்டைகளாலான வேலி யிட்டு வளைத்தனர். பிறகு விசை எறின 'பம்பு' களால் வளையப்பட்ட வட்டத்திற்குள்ளிருந்த நீர் முழுதையும் இறைத்தார்கள். அப்பொழுது தரை மட்டம் வெட்டையா கவே, நிலத்தின் மீது எவ்வாறு வேலை செய்யக்கூடுமோ, அவ்வாறே ஆற்றினடியில் வேலை செய்யலாயினர்! ஆனால் ஆறு சீறியது. அச்செறுப்பு அதன் தொண்டைக்குள் ஓர் எலும்புத் துண்டு போய் அடைத்துக்கொண்டது போலிருந் தது. எனவே, இந்தச் செறுப்பை உமிழ்ந்து, செயற்கைக் குண்டுள் பாய்ந்து, மனிதரையும், இயக்கிரங்களையும் அமிழ் த்தத் துணிவு கொண்டிருக்கின்றது! ஒரு தடவை தன் எண் ணத்தை முற்றுவித்ததும் உண்டு. 1928-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ந் நாளிலே, அது திடீரென கீழ்ச் செறுப்பைப் பிடுங்கி உடைத்தது. நொடியில் நீர் விரைந்தது; சுமார் ஒரு மணி நேரத்திற்குள் அந்தப் பெருங்குண்டு முழுதும் நீர் நிறை

க்கது. வேலைக்காரர்களும், அமைக்கப்பட்டிருந்த இயந்திரங்களும் பிழைத்ததுவே பெருஞ் செயலாகிவிட்டது. காரணம் என்ன வென்று காணச் சலாபஞ் செய்வோரை இறக்கி ஆராய்ந்தனர். செறுப்பின் அடிப்பக்கமாக பத்து மீட்டர் சதுரமுள்ள ஒரு கோடெடுத்து ஆறு பாய்ந்ததாகக் கண்டனர். மிகுந்த கஷ்டத்துடன், வைக்கோலும், குப்பையும் கூழமும் நிறைந்த கோணிப்பைகளால் இத்தப் போட்டை அடைத்தனர். பிறகு மீண்டும் நீரை இறைக்கத் தொடங்கினர். இதற்கு இருபத்தேழு நாட்கள் பிடித்தன; பணிப் பொழுதில் ஆறு செய்த வேறுக்கு, நாட்கள் இருபத்தேழாயின!

ஆறு எவ்வாறு எஃகுச் சுவரை உடைத்ததென்று.

ஆனால், இதனினும் பெரியதொரு கேடு, ஜூலை மாதம் 12-ந் தேதி விளைந்தது. வலது பக்கத்துக் குண்டின் பக்கமாக, வேலை மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. மாச் செறுப்புக்கு அடுத்தாற்போல, எஃகுப் பாளங்களால் சுவ ரொன்று எழுப்பப்பட்டு வந்தது. இரண்டு பெரிய சுமை யெடுக்கும் இயந்திரங்கள் வேலை செய்துகொண்டிருந்தன. இரு அடக்கர்களுடைய வன்மையும் வேகமும் கொண்டன வாய் அலைகள் இயங்கின. ஒவ்வொன்றும் ஒரு தனி எஃகுக் கூற்றினைக் கவ்வி, ஓரிடத்தில் உயர்த்தி, பிற் இடவேண்டிய இடத்தில் இட்டு, ஆவியால் இயக்கப்பெறும் ஒரு கூட்டத்தால் குற்றியை நிலத்துள் அடித்து இருக்கும். உடனே மறு குற்றியைப் பார்த்துத் திரும்பும். இவ்வாறாக, சுமார் மணி ஒன்றாவதற்குள், கடைசி வேலைக்கு வேண்டிய குற்றிமட்டுமே பாக்கி இருந்தது.

'உடனே திடீரென்று எஃகுச் சுவரின் ஒரு பக்கத்தில் உடைப்பெடுத்து அது நீரில் விழத் தொடங்கியது. கயிறுகள் அறுந்தன; செறுப்புகள் சிதைந்தன. இருப்பு வண்டித் தொடரொன்று இழுப்பிற் கொண்டு போகப்பட்டது. இரண்டு நிமிடங்களுக்குள் எஃகுச் சுவரில் 170 மீட்டர் பிய்த்துக்கொண்டு போகப்பட்டது' என்று அங்கிருந்த எஞ்சினீயர்களில் ஒருவர் கூறுகின்றார். வேலையாட்களும், எஞ்சினீயர்களும் செய்வதின்னதென்றறியாது அச்சமிக்கெழு நோக்கி நின்றனர். கற்காலமாக, மூழுச்சுவரும் சாயவில்லை. ஒரு பக்கத்தில் அது மாச்செறுப்போடு கம்பிகளால் பிணைக்கப் பட்டி

ருந்தது. ஆனால் மற்றப் பக்கத்தில் சுவர்முழுதுமே உடைக்கப்பட்டு விட்டது.

ஐநூற்றி இருபத்தேழு குற்றிகள் நீரில் வீழ்ந்தன— ஐநூறு டன் எடை! எவ்வளவு உழைப்பு வீணாகியது! இது எதனால் விளைந்தது?

எதனாலென்றால், எடைக்குக் குற்றிகள் ஆற்றினடியில் சமதரையில் இறக்கப்படாமல், சாய்வான தரையில் இறக்கப்பட்டதாலேயே யாகும். சாய்வான தரையில் நிறுத்தப்பட்ட வைகளைத் தள்ளுவது, நீரின் சக்திக்கு அரியதொரு செயலன்று.

மனிதர்கள், அற்றை ஒரு எடைச் சுவரால் அடைக்க முயன்றனர் ஆனால், ஆறு அதனை ஒரு பழைய வேலியைப் போல பிடுங்கி எறிந்து விட்டது.

இச்சமயம் ஆறு செய்த கேட்டை ஆற்றுவது, முன்னிலும் கடினமாக இருந்தது. அழுந்த எடைக்குச் சுவர் தண்ணீருக்குள்ளிருந்து திரும்பவும் தலையெடுக்கச் செய்யவேண்டும். ஆனால், அது ஐநூறு டன பளுவுடையது. இவ்வளவு பெரிய பளுவை எப்படி உயர்த்துவது? ஆகவே, சுவரைப் பல இடங்களிலும் தண்ணீருக்குள்ளேயே துண்டாக்கி, சிறிது சிறிதாக வெளியில் எற்றுவதென்று முடிவு கட்டப்பட்டது.

நீருகுள்ளே நெருப்பு

எடைகைத் துண்டிப்பது, அதிலும் தண்ணீருக்குள் வைத்து! இது நீப்பிராள்டாயில் எவர்க்குந் தெரிந்த வித்தையல்ல. எனவே லெனின் கிராடிலிருந்து நெருப்புக் கூடங்கள் வரவழைக்கப்பட்டன. இவைகள உளி மூனை கொண்டோ, வாள் கொண்டோ, அன்றி ஒரு ஆலியின் தீ கொண்டோ அறுக்கின்றன. இந்த நெருப்பு மிகப் புதுமையானது. அது எடைக்கு எரியும் வண்மையது. நீரால் அவித்தற்கு அரியது.

தண்ணீருள் எரியும் இந்தத் தழல் விளக்குகளுடனே சிலர்பஞ்சு செய்பவர்கள், நீப்பர் கதக்குள்ளே மூழ்கி, எடைக்குச் சுவரினைத் துண்டிகக்கத் தொடங்கினர். இதற்பணி பல நாளெடுத்தது. பின்னர் குற்றிகளில் கப்பிகளைப் பிணைத்து, அவைகளை வர வரச் சுற்றுவதற்காக, பதினைரு உருளைகள் குண்டின் விளிம்போரமாக வைக்கப்பட்டன.

இவ்வாறாகத் துண்டு துண்டாச்ச சுவர் முழுதும் ஆற்றி விரைந்து வெளியாக்கப் பட்டது.

இதற்கு இரண்டு மாதங்கள் பிடித்தன. ஸெப்டம்பர் 10ல் தான் வளைவிலிருந்து தண்ணீரை இறைக்கும் படியான நிலைக்கு, எஃகுச் சுவர் திரும்பவும் நிறுத்தப் பட்டது.

ஒரு காப்புக்குச்சு (ஒரு காசுக்கு) மூன்று ஆள் வேலை.

ஆறு முடிவாக அடக்கப் பட்டதும், நீப்பிராஸ்ட்ராய் என்பதிலிருந்து நமக்கு என்ன கிடைக்கும்?

நீப்பர் ஆற்றில், முதலாவதாக ஆறு இயந்திர உருளைகளும், பின்னர் நான்கும் வைக்கப்படும். ஒவ்வொரு உருளையும், 90,000 குதிரை வேகங் கொண்டது! எனவே இறுதியில், நீப்பராஸ்டிராய் நமக்கு 900,000 குதிரை வேகம் கொடுக்கும்.

ஒரு மனிதனது வன்மை, இருபதிலொரு குதிரை வேகம்தாகக் கணிக்கப் படலாம். எனவே, நீப்பிராஸ்டிராய் நமக்கு ஒருகோடி 80 இலட்சம் இயந்திர வேலையாட்களைத் தரும் என்பது ஏற்படுகின்றது. இவ்வளவு இயந்திர வேலையாட்களும், ஒரு கூலியும் இல்லாமல் உழைப்பார்கள்.

நீப்பிராஸ்டிராயில், மின்சார சக்தி என்ன விலைக்கு விற்கப்படுமென்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு கிலோவாட் அவருக்கு, ஒரு காப்பெக் வீதமாகும். ஆனால், ஒரு கிலோவாட்டர் அவர் என்பதென்ன? அதாவது திட உடலுள்ள ஒருவன் செய்யும் மூன்று காளைய உழைப்பாகும்.

மூன்று நாள் உழைப்புக்கு ஒரு காப்பெக். இதுவே நீப்பிராஸ்டிராயில் ஒவ்வோர் இயந்திர வேலையாளுக்கும் கொடுக்கப்படுங் கூலியாகும்! இதனால், நீர் மின்சார சக்தி நிலையங்கள் ஏற்படுத்துவது மிகுந்த இலாபகரமானதென்று விளங்குகிறது. எனவே இன்னும் பல காண்போம்.

இப்பொழுதே நமக்கு நீர் மின்சார சக்தி நிலையங்கள் ஐந்துள்ளன. அவை, வால்காவ் (லெனின் கிராடின் பக்கத்தில்,) ஸெமோ ஆவ்சால்ஸ்கி, எரிவன், லெனின், (மூன்றும் காக்கஸஸில் உள்ளன,) கான்றோபாஷ் (கரேலியாவிலுள்ளது) என்பனவையாம். அவைகள் நமக்கு 110 ஆயிரம் குதிரை வேக மின்சாரம் அளிக்கின்றன.

வேர்க்கடலை ஆகாரம்.

(Dr. L. R. Fernandez.)

வேர்க்கடலை அல்லது மணிலாக்கொட்டை என்றுசொல்லப்பட்ட நிலக் கடலையானது இந்தியாவின் பல பாகங்களில் ஏகாரங்களிலும், ராமாசந்திரங்களிலும் சமயா சமயங்களில் மக்கள் விருப்பத்துடன் சாப்பிட்டுவரும் ஓர் உணவுப்பொருளனினும், இதன் உயரிய போஷணா சக்தியை எல்லோரும் சரிவர உணர்ந்திருப்பதில்லை. இந்தியாவில் பயிராகும் பல விதமான விதைகளிலும் நிலக்கடலையைப்போன்ற சத்துடையவை மிகச்சில. நிலக்கடலையில் ஆரோக்கியமான தேக வளர்ச்சிக்கு இன்றியமையாத சத்துப் பொருட்கள் கீழ்க் கண்ட விகிதத்தில் காணப்படுகின்றன.

	(சதமானம்)
Protein (மாம்ச பதார்த்தம்)	29.8%
Fat (கொழுப்பு)	43.5%
Carbo Hydrate(மாவுபதார்த்தம்)	17.1%
Mineral Salts (உப்புகள்)	2.2%

நிலக் கடலையிலிருந்து எடுக்கப்படும் பால், பசுவின் பால் அல்லது சோயா-பீன் (Soya-Bean) பால் இவற்றிற்கு சமமான சத்துடையது. நோய் பிடித்த பசுக்களின் பாலை யருந்துவதால் ஏற்படும் Bovine Tberculosis என்ற க்ஷயரோகத்தினால் வருடந்தோறும நூற்றுக்கணக்கான குழந்

ஆறு பெரும் நீர் மின்சார நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நீப்பாஸ்டிராய், ஸ்விர்ஸ்கி, பியான்ஸ்கி, கிஸலடான்ஸ்கி, ஸோராகாட்ஸ்கி எனப்படுபவைகளே அவைகள். காக்கஸிலும், மத்திய ஆசியாவிலும் மூன்று பெரிய நிலையங்கள் விரைவில் தொடங்குவோம். ஆனால் எத்தனைச் சிறு நிலையங்கள் கட்டி முடிக்கப் பட்டன! இன்னும் எத்தனை கட்டபபடப்போகின்றன! இந்த நீர், மின்சார நிலையங்களெல்லாங்கூடி, சுமக்கு 30 அல்லது 40 லட்சம் டன் நிலக்கரி, ஆண்டொன்றுக்கு மிச்சப்படுத்துகின்றன.

தைகள் மரணமடைய நேரிடுகின்றது என்பது மறுக்கப் கூடாத உண்மை. சுத்திகரிக்கப்படாத பசுக்களின் பாலிற்குப் பதிலாய் குழந்தைகளுக்கு நிலக் கடலைப்பால கொடுக்கும் வழக்கத்தைப் பெற்றோர்கள் மேற்கொள்வார்களாயின் இத்தனை நூற்றுக் கணக்கான அரிய உயிர்களை நாம் காப்பாற்ற முடியும்.

இரண்டாவதாக பசுவின் பால் மிகுந்த விலையுள்ளதாயிருப்பதால் இந்தியாவில் வறுமைப் பிணிபால் வாடும் ஏராளமான மக்கள் பசுவின் பால் அருந்த சக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் வெகு சுருக்கமான செலவில் தினந்தோறும் நிலக் கடலைப் பால் உபயோகித்து வரலாம். சைனா தேசத்தின், நாற்பது கோடி மக்கள் பல நூற்றாண்டுகளாக பசுவின் பாலைக்காட்டிலும், நிலக் கடலைப் பாலையே விரும்பி சாப்பிட்டு வந்திருக்கின்றனர். அதன் எதிரியான ஜப்பான் தேசமும் அவ்வாறே செய்து வருகின்றது.

தகுந்த போஷிப்பின்மையால் நலிவுற்றிருக்கும் குழந்தைகளுக்கும், நோயினால் பலவீனப்பட்டவர்களுக்கும், கர்ப்பஸ்திரீகளுக்கும், பால் தாய்ச்சிகளுக்கும் நிலக் கடலைப் பால் ஓர் உன்னதமான ஆகாரம். ஏனெனில் தேகத்தின் பல தசைகளுக்கும் வலுவூட்டி, தேகத்தின் நிறையை அபிவிர்த்தி செய்ய இது மிகவும் உதவி செய்கிறது. புடிங், பாயசம், அல்வா முதலிய பல ருசிகரமான விதங்களில் நாம் நிலக் கடலையை உபயோகப்படுத்தலாம். கிராம சீர்திருத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் யாவரும், கூட்டுறவு முறையை அநுசரித்து நிலக் கடலை வியாபாரத்தை காட்டில அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது என் விருப்பம்.

இந்திய மக்கள் பெரும்பாலும் அதிகமான கார்போஹைடரேட்டுகளை உட்கொண்டு, தேக வளர்ச்சிக்கு அவசியமான புரோட்டீன சத்துக்களை மிக குறைந்த அளவில் சாப்பிட்டு வருகின்றனர் எனபது பிரசித்த உண்மை.

எண்ணெய் அல்லது நெய்யில் நிலக் கடலையை வறுத்து தினந்தோறும் மத்தியானத்திலும் இரவிலும் ஆகாரத்திற்குப் பின் சாப்பிட்டு வருவோமானால், நமது ஆகாரத்தில் குறைவாயிருக்கின்ற புரோடீன் சத்துகளை இது பூர்த்தி செய்யும். இவ்வாறு பாரத காட்டின் மக்கள் எல்லோரும்

தங்கள் தினசரி ஆகாரத்தில் தங்கள் நிலக் கடலையையும் ஓர் பகுதி சேர்த்துவராய் பழகுவாராயின், அது காட்டிற்குப் பெருத்த நன்மை பயக்கு. இப்பழக்கத்தால நாம் சுகதேகிகளாய் வாழ்வதுடன் காட்டின் பொருளாதார நிலைமையையும் அபிவிர்த்தி செய்வோம்.

மலச்சிக்கலை நிவர்த்திப்பதில் நிலக் கடலையிலுள்ள எண்ணெய் விசேஷமானது. முன் சொன்னதுபோல் வறுத்த நிலக் கடலையை மத்தியானத்திலும், இரவிலும் ஆகாரத்திற்குப் பின் சாப்பிடுவதினால், குடல்கள் மெருகிடப்பட்டு ஜீரணக்கருவிகள் பலமடைந்து ஒருநாளைக்கு குறைந்தது ஒருவிசையாவது நன்றாக மலசுத்திசெய்ய ஏதுவாகும். அதிக நாள்பட்ட கடின மலச்சிக்கல் கேசுகளுக்கும், விசேஷமாய் வயோதிகபருவத்தில் ஏற்படும் மலச்சிக்கல்கேசுகளுக்கும், அதேதர் என் ஆலோசனையின்படி. இம்முறையை பிரயோகித்து பரிசோதித்ததில் எப்பொழுதும் திருப்திகரமான பலன் கிடைத்துள்ளது.

இத்தகைய உபயோகமுள்ள மலிவான ஆகாரப் பொருளாகிய நிலக் கடலை இன்னும் ஏராளமாக பயிடப்பட்டு, அவற்றை ஜனங்கள் அதிகமதிகமாக உபயோகித்து வரவேண்டும். கிராம இந்தியாவின் முன்னேற்றத்தில் சாத்தையுள்ள யாவரும், நிலக் கடலை பயிரிடுதலை அபிவிர்த்தி செய்வது தேசத்தில் ஆரோக்கியத்தையும் திடகாத்திரத்தையும் வளர்ப்பதாகும் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

போராசையில்லா விட்டால் எந்த மனிதனும் தனது புத்திக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாததை ஒரு காலமும் கம்பி பின்பற்ற மாட்டான்.

ஈ. வெ. ரா.

* * *

பணக்கார அரசாங்கமோ பார்ப்பன அரசாங்கமோ ஏற்படுவதைவிட பிரிட்டிஷ் அரசாங்கமே மேலானது.

ஈ. வெ. ரா.

தற்கால
ரஷ்யப்பெண்கள் நிலை.

—(·)—

மாஸ்கோ நகரில் 20,000 விபசாரிகள்.
பீடர்பர்க் நகரில் 40,000 விபசாரிகள்.

இவ்வளவு பெருவாரியான விபசாரிகள் ஜார் சக்ரவர்த்தி ஆட்சிக் காலத்தில் இருந்தனர்.

இன்று அந்த விபரீத நிலைமை மாறிவிட்டது. வயிற்றுப்பாட்டின் பொருட்டுப் பெண்கள் விபசாரம் செய்யும் கொடுமை மறைந்தது. இத்துடன் விபசார நோய்களும் ஒழிந்தன.

ரஷிய நாட்டுப் பெண்தொழிலாளர்களின் முதல் மகாநாடு 1918-ம் வருஷம் நவம்பர் மாதம் மாஸ்கோ நகரில் கூடியது. உழைப்பாளிகளான பத்து லக்ஷம் பெண்கள் சார்பில் 1200 பிரதிநிதிகள் அம்மகாநாட்டில் கலந்து அநேக முக்கிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. "பொருளாதாரம், அரசியல், சமூக வியல் விஷயங்களில் ஆண்களுக்குரிய உரிமைகள் எல்லாம் பெண்களுக்கும் இருக்கவேண்டும்; விவாகச் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும்; கர்ப்ப-பிரசவ காலத்திற்குரிய சட்டங்களைச் செயவேண்டும்" என்பனபோன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. "பெண்களுக்கென்று தனிப்பட்ட சௌகரியங்கள் அவசியம் இல்லை. ஆண்களுக்குள்ள சௌகரியங்கள் எல்லாப் பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டும்" என்று வற்புறுத்தப் பட்டது. தொழில் செய்யும் பெண்களுக்குத் தனிப்பட்ட சங்கங்கள் அவசியம் என்றும், அவர்களுடைய நிலைமைகளை முன்னேற்ற எல்லா விதத்திலும் பிரசாரம் கடக்கவேண்டும் என்றும் பலர் வற்புறுத்தினர். மேற்கண்ட கொள்கைகளை ஒட்டியே லெனின் அறிக்கை வெளியிட்டார். அதன்மூலம் பெண்களுக்குப் பல உரிமைகள் பூர்ணமாய்க் கிடைத்தன.

தொழில் துறையில் பெண்கள் பெருக்கம்.

ரஷிய நாட்டு முன்னேற்றத்திட்டங்களில் குறிக்கப்பட்டு பற்பல தொழிற் பிரிவுகளிலும் பெண்கள் பெருவாரியாக ஈடுபட்டு வருகின்றனர். முதல் ஐந்தாண்டுத் திட்ட வேலைகளில் $4\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள் 35 லக்ஷம் பெண்கள் சேர்ந்திருந்தார்கள். 1932- வருஷம் ஜனவரி மாதத்தில் விவசாயமல்லாத ஏனைய தொழில்களில் பெண் தொழிலாளர் தொகை 100க்கு 135வரை இருந்தது. ஒரு யந்திரத் தொழிலிலேயே 32.3ம், வீடு கட்டும் வேலைகளில் 12.5, விகிதம் பெண்களே ஈடுபட்டிருந்தனர். உடலுழைப்புக்கு மாத்திரமில்லை— அறிவுத்திறமைகளை உபயோகிக்கும் வேலைகளிலும் அதிகப் பெண்கள் வந்து சேர ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். 1926-31 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட பெண் தொழிலாளர் பெருக்கம் வருமாறு:-

	I926	1931
உலோகத்தொழில்	4,800	68,700
தச்சுவேலை	800	6,000
அச்சுத்தொழில்	5,200	12,900
வீடு கட்டல்	700	17,000
யந்திரத் தொழில்	600	12,500

(பல் நிலையங்களில்)

பெண்களுக்குப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் வேண்டிய பயிற்சிகள் அளிக்க ஏற்பாடு செய்தமையினாலேயே இவ்வளவு அபிவிருத்திக்கு இடமுண்டாயிற்று. மாஸ்கோவில் உள்ள 'உருக்கு-கம்பித் தொழிற்சாலை'யில் 1928-ம் ஆண்டில் ஒரு பெண்ணும் வேலை செய்யவில்லை 1934-ம் ஆண்டில் அங்குள்ள தொழிலாளர்களில் 100-க்கு 31 பேர் பெண்கள். மாஸ்க்கோவில் உள்ள ''ஹமர் அண்டு ஸ்கில் வொர்க்ஸ்''ல் உள்ள தொழிலாளர்களில் 100-க்கு 60 விகிதம் பெண்களே. வாக்ஸ்தாபனமாயினும் சரி-வேலை செய்கின்றவர்களில் பெரும்பாண்மையோர் பெண்களாயிருந்தால்-பாக்டரி நிர்வாகிகள் மூன்று பேரில் (ராஜிய சங்கக் காரியதரிசி —டைரக்டர்—டிரேட் யூனியன் அல்லது பாக்டரி கமிட்டிக் காரியதரிசி) இரண்டுபேர் பெண்களாகவே இருப்பார்கள்.

பெண்களும் அரசியலும்.

அரசாங்கத்தில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமானால் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தொழிற் சாலைகளில் வேலைசெய்யும் 25 ஸ்திரீகளுக்கு ஒருவரும் விவசாயத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களில் 50 பேருக்கு ஒருவரும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். 1922-ம் ஆண்டில்பெண்பிரதிநிதிகளின்தொகை $2\frac{1}{2}$ லக்ஷம், அதாவதுமொத்தமான பிரதிநிதிகளின் தொகையில் 28.8 பெண்கள். இவர்களுக்குத் தலைவர்களாக இருக்கும் பெண்களின் தொகை 5000. 1932-ம் ஆண்டில் 'பீப்பிள்ஸ் கோர்ட்டு'களில் பெண் நீதிபதிகளின் தொகை 93,486. மற்றப் பெரிய நீதிமன்றங்களுல் 8 ஸ்தானங்களைப் பெண்களே வகிக்கிறார்கள். மந்திய அரசாங்க நிர்வாகத்திலும் பெண்கள் தொகை அதிகமாகவே இருக்கிறது.

விபசாரமும்-நோய்களும்.

பெண்களுக்குப் பொருளாதார உரிமை அளிப்பதாலும் கல்லுபதேசத்தாலும் விபசாரத்தை ஒழிக்கலாம் என்பது லோவியத் பெண்களின் நம்பிக்கை. புரட்சி முடிந்த பிறகு விபசாரத்தை ஒழிக்கும் நோக்கத்துடன் ஒரு 'ஜாயிண்ட் கொளன்சில்' நிறுவப்பட்டது. விபசாரத்தை ஒழித்தால் அது சம்பந்தமான நோய்களும் ஒழியும். அதனால் அந்தத் தொழில்புரிந்த பெண்களை மீட்டு அவர்கட்கு ஏற்ற தொழில்கள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மற்றவர்களோடு இவர்களைக் கலக்க விடுவதில்லை. இதற்காக இரண்டு பிரத்தியோக ஊழிய ஸ்தாபனங்கள் தீவிரமாய் வேலை செய்து வருகின்றன.

விபசாரத் தடை

விபசாரத் தொழில் ஈடுபட்டவர்களில் 100-க்கு 5 பேராவது இருப்பார்கள். இவர்களை மீட்சி செய்து திருத்துவதற்கு 'லேபர் காக்ஷன் இன்ஸ்டிடியூட்'கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இங்கே விபசாரிகளைச் சீர்திருத்தம் செய்தபிறகு அவர்கட்கு சமூகத்தில் அந்தஸ்து அளிக்கப்படும். வயிற்றுப் பாட்டுக்கு நிய தொழிலும் கொடுக்கப்படும். இப்படியே ஆண் விபசாரர்களைச் சீர்திருத்தம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"வாழ்க்கை அவசியத்தின் பொருட்டோ அல்லது வேறு சரியான காரணத்தாலோ தம்முடம் இருக்கும் பெண்ணல்லாத வேறு பெண்ணைத் தம்மிடம் சம்பந்தம் வைத்துக்கொண் டிருக்கும் மனிதருக்கு 3 ஆண்டுகளுக்குக் குறையாத தண் டனை விதிக்கப்படும்".

"வெளிப்படையாகவோ மறைவாகவே தம்மிடம் இருக் கும் சுகதோய்களை மற்றவர்கட்குப் பரவச்செய்வோருக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்படும்." இம்மாதிரி யான சட்டங்களை இயற்றி வைத்திருப்பதோடு விபசாரத் தின் தீமைகளைக் குறித்துமிகுந்த பிரசாரமும் கடைபெற்று வருகிறது.

விபசாரிகளின் தொகை குறைவது போலவே சுகதோய் களின் தொகையும் குறைந்து கொண்டே வருகிறது. இவ் வுண்மையை மாஸ்கோ நகரின் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம். 1914-ம் ஆண்டில் விபசார தோயா ளரின் தொகை நூற்றுக்கு 56.9. 1924-ம் ஆண்டில் 31.7. 1931-ம் ஆண்டில் 7. எவ்வளவு வேகமாய்க் குறைந்து விட் டது என்பதைக் கவனியுங்கள்.

1931-ம் ஆண்டில் தெருக்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்த விபசாரிகளின் தொகை கணக்கெடுக்கப்பட் டது. அந்த வருஷத்தில் அவர்களின் தொகை 400 மாத் திரமே இருந்தது. 1913-ம் ஆண்டில் (அதாவது ஜார் ஆட்சிக் காலத்தில்) மாஸ்கோ நகரில் மட்டும் 20,000 பேர் விபசாரிகள் இருந்தனர். பீட்டர்ஸ்பர்க்கில் 40,000 பேர் இருந்தனர். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க ஏற்பாடு செய்ததும், விபசார நோய்களை நீக்கத் தீவிரமாக முயற்சி செய்ததும் குறிப்பிடத்தக்க நல்ல பலன்களை அளித்து வருகின்றன.

கோயிலைச்சுத்தப்படுத்த என்று மாட்டையும், சாணி யையும், மூத்திரத்தையும் கோவிலுக்குள் கொண்டு போகி றார்கள். ஆனால், மனிதன் அக்கோயிலிலுள்ள கடவுளை வணங்களென்று உள்ளே போனால் சாமி தீட்டாய் விட்ட தென்று கும்பாபிஷேகம் செய்கிறார்கள். இவர்கள் அறி வுள்ள மனிதர்களா? ஈ. வெ. ரா.

உலகின்
எதிர்கால அரசர்கள்.

உலகத்தின் பல பாகங்களிலும் அரச குடும்பங்களில் பிறந்து, இன்று விளையாட்டுக் கருவிகளையேந்தித் தங்களது எதிர்கால அபாரமான பொறுப்புகளைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் விளையாடிவரும் அரசிளங் குழந்தைகளின் வாழ்க்கைகளிலேயே உலகின் எதிர்கால சரித்திரம் அடங்கியிருக்கின்றது. இன்று அரச குடும்பங்களெல்லாம் அபிவிருத்தியடைந்து வருகின்றன. இன்றைய உலகில் பிரதானமானதாக விளங்கும் குழந்தை எது? பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலோர் "எலிஸபெத் அரசிளங் குமரி" என்று பதிலளிப்பார்களே தவிர வேறெதையும் சிந்திக்க மாட்டார்கள். ஆனால் உலகத்தில் முக்கிய குழந்தை ஜப்பான் தேச இளவரசனாகிய அகிஹிடோ சுகு கோமியா எனும் குழந்தையென்றே கருதுகின்றேன். இக்குழந்தை ஜப்பானிய சக்கிரவர்த்தியாகிய ஹிரோஹிடோவுக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன், மூன்று பெண் குழந்தைகளுக்குப் பிறகு பிறந்துளது. அகிஹிடோ எனும் இவ்வரசிளங்கோ, இரண்டு ஆண்டுகள் திரம்பிய மாஷிடோ எனும் இளையவரசனை சகோதரனாக அடைந்துள்ளான். தற்போதைய நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து தம்முடைய தேச சரித்திரம் மிக நெருக்கடியாக விருக்குங் காலத்தில், அகிஹிடோ பூரண அதிகாரம் பெற்ற சக்ரவர்த்தியாகி, உலகில் சக்தியிருக்துள்ள அரசர்களில் ஒருவராயிருப்பார்.

மனித சமூகத்தின் பழுப்பு வர்ணமுடைய மக்களனைவருக்கும் தலைமை தாங்கி உலகத்திலேயே அதிகமாகச் செல்வாக்கையடைய வேண்டுமென்று ஜப்பான் நிட்டம் வகுத்து வருவதென்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த போராட்டத்தின் நெருக்கடியான நிலைமை அகிஹிடோ ஆட்சியில்தான் வரலாம். திரண்டு, பிங்க் வர்ணம் வாய்ந்த கன்னங்களுடைய அகிஹிடோ வெனும் இச் சிறு குழந்தை

டோகியோ நகரின் அரசாங்க பூந்தோட்டத்தில், சிகப்பு வர்ணம் வாய்ந்த விளையாட்டு மோட்டாரை வைத்துக் கொண்டு விளையாடி வருகின்றது. இத்தக்குழந்தைக்கு ஐந்துவயதடைந்ததும், முன்னோரது பழக்கம்போன்று, இதற்கென தனிக் குடும்பம் ஒன்று சிருஷ்டிக்கப் பெறும். ஐந்து வயதடைந்ததும், குழந்தை யென்ற பெயர் மறைந்து, உலகில் எதிர்காலத்தில் செய்யவேண்டிய பெரும் பணிக்கேற்ற வண்ணம், இவ்வரசிளங் குமரன் முக்கியமான பயிற்சிகளில் ஈடுபடுவான்.

ரோம ஆட்சியில் முஸோலினி உறுதியுடன் நிலைத்து விட்டதும், இத்தாலிய அரசபரம்பரை அதிகமாகவோ குறைவாகவோ மங்கலாயிற்று. எனினும் தற்போதைய பட்டத்து இளவரசரது புதல்வனுக்கு 1937 மே மாதம் 31-ம் தேதி ஞானஸ்நானம் செய்யப்பெற்றபோது விட்டோரியோ எமனுல் ஆல் பெர்டோ கார்லோ டோரோ அம்பெர்டோ போணி பேசியோ அமெடியோ டாமியனோ பெர்னாடினோ வெனுரா மார்ஷியோ எனும் பெயர்கள் வழங்கப் பெற்றன. மொத்தம் பன்னிரண்டு பெயர்கள்! நார்வே தேசத்து பட்டத்து இளவரசரது குழந்தையாகிய ஹெரால்டு எனும் அரசிளங் குமரன் ஒரு ஆண்டு நிரம்பிய குழந்தையாயிருக்கிறான். நார்வே தேசத்தில் இக் குழந்தை அனேக வகைகளில் செல்வாக்கு பெற்று வருகின்றது.

ஸ்வீடன் தேசத்து சிம்மாசனத்துக்கு உரிமை பெற்றவர்கள் இன்று, அத்தேச இளவரசிகளாகிய மூன்று ஆண்டு நிரம்பிய மார்கெரட்டும், அதன் இளைய சகோதரியாகிய அலைஸ்டாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப்பின் ஒரு சகோதரன் தோன்றி விட்டால் இரு சகோதரிகளும் பட்ட உரிமைகளை இழந்து விடுவார்கள். இவர்களது பெரிய பாட்டனாரான ஐக்காவது கண்டேவ், சுமார் எண்பது ஆண்டுகள் நிரம்பியும், டென்னிஸ் பந்தாட்டத்தை உற்சாகமூடன் விளையாடி வருவதே அந்த அரச குடும்பத்தினர் நீண்ட வாழ்க்கையுடையவர் என்பதைக் காண்பிக்கிறது. அந்த நிலைமையில் மார்க்கெரட் அரசிளங் குமரி பட்டம் ஏற்கும் விஷயத்தில் சிறிது ஐயம் விளைவிக்கின்றது. டென்மார்ச் தேசத்தில் பட்டத்துக்கு வரவேண்டியவர், இன்று மூன்று வயதடைந்துள்ள எலிஸபெத் இளவரசியாவர். இவ்விளங்கன்னி, அரசரது இளைய புதல்வரான கட் இளவரசரின் புதல்வியாக விருந்த போதிலும், டென்மார்க் சிம்மாசனம் இவ்விளவரசிக்கே உரியதாகும்.

பெல்ஜிய அரச குடும்பத்தில் தாயிழந்த இருபிள்ளைகளும், ஒரு பெண்ணும் இருக்கின்றனர். பட்டத்திளவரசனாகிய படினுக்குத் தற்போது வயது ஏழாகின்றது. இளவரசனது மூத்த சகோதரி ஜோசபின் கார்லெட் பத்து வயதுள்ளவராகவும், இளைய சகோதரன் ஆல்பெர்ட் நான்கு வயதுள்ளவனாகவுமிருக்கிறார்கள். இங்கிலாந்தில் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் நான்கு இருக்கின்றன; ஆனால் பட்டத்துக்குரிய ஆண் குழந்தையொன்றுமில்லை. இளவரசிகளாகிய எலிஸபெத், மார்கரேட் ரோஸ் ஆகிய இருவர்களும் தங்கள் குழந்தைப் பருவத்தைக் கடந்து விட்டார்கள்.

கெண்ட் பிரபுவின் குழந்தைகளாகிய எட்வர்டு இளவரசரும், அலெக்ஸாண்டிரியா இளவரசியும் உலகத்திலேயே அழகிற் சிறந்த குழந்தைகளாக விருகின்றனர். என, ஸ்ரீ. காப்டன் ஜேம்ஸ் என்பவர் ஒரு அன்னிய காட்டுப் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

தினம் ஆயிரம் பாம்புகள் பக்ஷணம்.

ஜப்பானியர் ஆகாரம்.

டோகியோவில் ஜப்பானியர் தினசரி ஆயிரம் பாம்புகளைப் பக்ஷணம் செய்து சாப்பிடுகிறார்கள்.

தண்ணீர் பாம்பு, ஓலைப்பாம்பு, பச்சைப் பாம்பு, கண்குத்திப்பாம்பு, விரியன், முதலிய எல்லா பாம்புகளையும் அவர்கள் சாப்பிடுகிறார்கள்.

பாம்பு சாப்பிடுவதால் பல வியாதிகள் நீங்குமென்பது அவர்கள் நம்பிக்கை.

அஸாகுஸா ஜில்லாவில் பாம்பு மாளிகை ஒன்று இருக்கிறது. இங்கு வருஷத்தில் 1,00,000 பாம்புகள் விற்பனையாகின்றன.

ஜப்பானியர், பாம்புகள் மட்டுமின்றி எலிகளையும் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்.

சென்ற வருஷத்தில் வைகவுண்ட் காண்டிடோம் இஜூவின் என்பவர் ஒரு பெரிய விருந்தளித்தார். அதற்கு 300 கண்பர்கள் வந்திருந்தனர். பார்மோஸா எனும் ஜப்பானிய தீவிலுள்ள பெரிய எலிகளைப் பிடித்துவந்து சமைத்து விருந்தில் பரிமாறினர்.

பிரோஜில் சர்வாதிகாரி.

ஐரோப்பாவிலுள்ள சர்வாதிகாரிகளான ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் போன்றவர்களைப்பற்றி வெளி உலகம் அதிகம் அறிந்திருக்கின்றது. ஆனால் பிரேஜில் தேசத்தில் சென்ற மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஹிட்லரைப்போலவே உறுதியுடனும் கண்டிப்பாகவும் ஆட்சி புரிந்துவரும் சர்வாதிகாரியான பிரசிடெண்ட் ஜூலியோ வார்காஸ் என்பவரைப்பற்றி அன்னிய தேசத்தினர்களுக்கு அவ்வளவாக ஒன்றும் தெரியாமல் இருக்கிறது. சமீபத்தில் தான் பிரோஜிலில் அராஜகம் ஏற்பட்டபோது அவருடைய பெயரும் பத்திரிகையில் அடிபட்டது. அவர் கலகத்தை அடக்கிக்கொண்டே புன்சிரிப்போடு கூடிய முகத்துடன் உறுதியாக அத்தேசத்தை நிர்வகித்து வருகிறார். சென்ற நவம்பர் மாதத்தில் தான் அவர் இப்போதுள்ள அரசியல் முறை காலத்துக் கேற்றதாக இல்லையென்றும், ஆகவே எல்லா கட்சிகளையும் கலைத்து விட்டுத் தம்முடைய கட்சியை மட்டும் அதிகாரத்தில் வைத்துக்கொண்டு சர்வாதிகார முறையில் தேசத்தை ஆளப்போவதாகவும் தெரிவித்து விட்டார். ஹெர் ஹிட்லரைப்போலவே பிரசிடெண்ட் வார்காஸும் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றியவர். அவருடைய தகப்பனார் ரியோ கிராண்டிடுசல் என்னுமிடத்தில் ஆடுமாடுகளின் பண்ணை ஒன்றை வைத்திருந்தார். வார்காஸ் சிறு பிள்ளையாக இருக்கும்போதே அந்த தேசத்தின் ஆட்சிமுறையில் அதிருப்தியும் வெறுப்பும் கொண்டார். காப்பிக்கொட்டை முதலாளிகள் தங்களிஷ்டப்படி ஆட்சி புரிந்து வந்தார்கள். அவர்கள் தங்கள் லாபத்தைக் கவனித்தார்களேயொழிய பிரஜைகளின் சுக துக்கங்களைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. வார்காஸின் தந்தைக்குச்சொந்தமான ஆடுமாடுகளுக்குக் கொசுவினால் ஏற்படக்கூடிய ஒரு வியாதி தோன்றி அவைகளில் பல இறந்து விட்டதால் குடும்பமே வறுமையில் மூழ்க வேண்டியதாயிற்று.

அதிகாரத்திலிருந்தவர்கள் பிரஜைகளின் இத்தகைய கஷ்டங்களுக்குப்பரிகாரம் தேடாததால் வார்காஸ் தனது பன்னிரண்டாவது வயதிலேயே, அந்த அதிகார வர்க்கத்தை ஒழித்

தவிட வழிதேட வேண்டுமென்னும் எண்ண முடையவராய் விஞ்ஞான சாஸ்திரம் முதலியவற்றைக் கற்றுக்கொண்டு கடைசியில் டாக்டராக வந்து ஆடு மாடுகள் மனிதர்கள் ஆகியோரின் பிணியைத் தீர்த்துச் சௌகரியத்தை அளித்ததுடன் தேசத்தின் ராஜீய சமூக விஷயங்களிலும் பிரவேசித்து மக்களுக்கு விழிப்பு ஏற்படும்படி செய்தார். 1889-ஆம் வருஷம் முதல் காப்பிக்கொட்டை முதலாளிகள் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. இந்த ஆதிக்கத்தை ஒழிக்க விரும்பிய வார்க்காஸ், தேசத்திலுள்ள படிப்பாளிகள், வாலிபர்கள், தோட்டத் தொழிலாளர்கள் முதலியோரைத் தம்முடன் சேர்த்துக் கோண்டு கிளர்ச்சியை ஆரம்பித்தார். ஆனால் அவரே முன்னணியில் வந்து நின்று விடாமல் பின்னாலிருந்து ஏவி விட்டு, வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்து வந்தார். 1924ல் அவர்கள் செய்த முயற்சி தோல்வியுற்றது. புரட்சியை உண்டாக்கியவர்கள் உராகுவே முதலிய இடங்களுக்குப் போய் ஒளிந்து கொள்ள வேண்டியதாயிற்று, எனினும் 1930-ஆம் வருஷத்தில் மீண்டும் ஒரு முறை வார்காஸ் தன்னுடைய வலது கை போன்ற துணைவரான கார்லஸ் பிரண்டஸ் என்பவருடன் சேர்ந்து கிளர்ச்சியை ஆரம்பித்தார். அப்போது நடைபெற்ற பொதுத் தேர்தலிலேயே அவரது கட்சிக்கு மெஜாரிட்டி கிடைத்தது. அப்போதே அவர் தேசத்தின் அதிபதியாகி இருக்கவேண்டும். ஆயினும் ஏதோ மோசடியும் தவறும் ஏற்பட்டு விட்டதால் அவர் தலைவராக வர முடியவில்லை. இதனால் ஏற்பட்ட விவாதம் நாளடைவில் உள்நாட்டுக் குழப்பமாக முடிந்தது. அந்தக் குழப்பத்தின் போதுதான் வார்காஸ் சாமர்த்தியமாக சர்க்கார் மாளிகையில் புகுந்துகொண்டு அதைக் கைப்பற்றிக் கொண்டார்.

அவர்கள் வெற்றியடைந்தார்களே யொழிய அவர்களிடையே ஒற்றுமை நிலைத்து நிற்கவில்லை. அவர்களுக்குள் பிளவு ஏற்பட்டது. தலைவராக வந்த வார்காஸ் தமது வாக்குறுதியின்படி நடக்க வில்லையென்று அவரது பழைய கண்பர்களே பழி சுமத்தலாயினர். அவருடைய வலது கை போன்றவரென்று கருதப்பட்ட கார்லஸ் பிரண்டஸும் அவரைக் கைவிட்டு மூன்றாவது சர்வதேசிய கோஷ்டியாருடன் சேர்ந்து கொண்டுவிட்டார். 1935-ல் அந்த பிரண்டஸ் என்பவர் புரட்சியை உண்டாக்க முயன்றபோது வார்காஸ் மன உறுதியுடன் அவரை எதிர்த்துத் துரத்தியதுடன் அவரது கோஷ்டியினரோ சட்ட விரோதமானவர்கள் எனப் பகிரங்கம்

★ செயற்கை ரத்த சிருஷ்டி. ★

ரசாயன சாஸ்திரம் அடைந்திருக்கும் அபிவிருத்திக்கு எல்லையே யில்லை. சமீபத்தில் கண்ணாடி ஹிருதயத்தைப் பிரபல டாக்டர்கள் கண்டுபிடித்து, அந்த ஹிருதயத்தைக் கொண்டே மனிதன் உயிருடனிருக்கும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இப்பொழுது செயற்கை ரத்தத்தையே வீயன்னா டாக்டர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். இதனால் வைத்தியம் புதியதோர் புரட்சியை அடைந்திருக்கிறது.

ரத்தம் போய் அதிக பலவீனமான நிலைமையிலிருப்பவர்களுக்கு பிறருடைய உடம்பிலிருந்து ரத்தமெடுத்து கோயாளியின் உடம்பில் புகுத்துவது தற்கால வைத்தியத்தில் முக்கியமாயிருக்கிறது. இதற்கு வேண்டிய ரத்தத்தை சேகரிக்க ருஷியாவில் நூதன முறை ஒன்றைக்கையாண்டு வந்தார்கள்.

படுத்தி விட்டார். பிறகு பச்சை அங்கியினர் என்னும் ஓரு சோஷ்டியினர் ஏற்பட்டுக் கிளர்ச்சி செய்தார்கள். இவர்கள் கட்சியையும் பிரசிடெண்ட் வார்காஸ் சின்னாபின்னப்படுத்திக் குலைத்து விட்டார். இப்போதும் இவர்களுடைய தொகை தானுதான் அதிகமாக இருக்கிறது.

வார்காஸ் பார்ப்பதற்கு ஓரு சர்வாதிகாரியைப் போல் இருக்கமாட்டார். குரூரமான பார்வையோ, கடுமையான முகக் குறியோ அவரிடம் கிடையாது. பெரிய அறிவாளி என்பதை அவரது முகத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம். எந்தச்சந்தர்ப்பத்திலும், புன்சிரிப்புடன் பேசும் சுபாவமுடையவராததால் 'புன்சிரிப்பு சர்வாதிகாரி' என்றும் சிலர் அவரை அழைப்பதுண்டு. அவர் அதிகாரத்துக்கு வந்தது முதல் இதர விதங்களில் காலப் போக்கு செய்யாமல் ராஜீய காரியங்களையே திறமையுடன் கவனித்து வருகிறார்.

ருஷியாவில் யாராவது மோட்டார் விபத்திலோ அன்றி மாடைப்பிலோ இறந்துவிட்டால், இந்தியா போன்ற நாடுகளில் செய்வதைப்போன்று அங்கு செய்வதில்லை. அவர்களை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் தலைகீழாகப் படுக்கவைத்து ரத்தக்குழாயை வெட்டிவிட்டு உடம்பிலிருந்து வரும் ரத்தத்தையெல்லாம் பிடிக்கிறார்கள். இந்த ரத்தத்தை சோதித்து கல்லதாயிருந்தால் பாட்டலில் அடைத்துவைத்து பக்குவப்படுத்தி பிறர் உடம்பில் ரத்தம் ஏற்றவேண்டியிருந்தால் இதை உபயோகிக்கிறார்கள்.

அதுவும் பழையது!

சென்ற வாரம்வரையில் ருஷியாவிலுள்ள இந்தமுறை உலகத்தில் சிறந்தமுறையாகப்பாவிக்கப் பட்டு வந்தது. ஆனால் வீயன்னா டாக்டரான பிரீட்ரிட்ச் காட்டன் சென்கர், மனிதர் உடம்பில் புகுத்த ரசாயனமுறையில் இயற்கை ரத்தத்திற்குப் பதிலாக செயற்கை ரத்தத்தைக் கண்டுபிடித்துவிட்டார் எனவே ருஷிய முறையும் பழைய காலத்து முறையாகிவிட்டது.

இந்த டாக்டர் இரண்டு வருஷகாலமாக இடைவிடாது கஷ்டப்பட்டுப்பல பொருள்களை முறைப்படி சேர்த்துச்செயற்கை ரத்தத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்.
கஷ்ட நிவர்த்தி

மனிதர் ரத்தம் எப்பொழுதும் கிடைப்பது எளிதல்ல. நோயாளியின் இருதயம் வேலைநில்லாது நின்று போகாதிருக்க வேண்டுமாகில், அதற்கு உடனே ரத்தத்தை அங்கோயாளி உடம்பில் புகுத்தியாகவேண்டும். ஆகையால் செயற்கை ரத்தம் சாதாரணமாகக் கிடைக்கக்கூடுமானால், இதனால் அநேக உயிரைக் காப்பாற்றிவிட முடியுமென்றும் அந்த வீயன்னா டாக்டர் கருதுகிறார்.

செயற்கை ரத்தம் டாக்டர்களுக்கேயன்றி ராணுவ அதிகாரிகளுக்கும் அளவுகடந்த ஆனந்தத்தைக் கொடுத்திருக்கிறது. பலத்த காயமடைகிறவர்கள் உடம்பில் ஏற்றிக் குணப்படுத்த யுத்த கால ஆஸ்பத்திரிகளுக்கு ரத்தம் அதிகத்தேவை.

இக்கஷ்டத்தை செயற்கை ரத்தம் நிவர்த்தித்து விடு மென்பது ராணுவத் தலைவர்களின் கருத்து.

பெண்கள் தியாகம்.

ஸ்பெயினில் இன்று பலத்த யுத்தம் நடந்து வருகிறது. இந்த யுத்தத்தால், வைத்திய வசதி போன்றவைகளில் புதிய சௌகரியமான மாறுதல்கள் ஏதாவது ஏற்படுகின்றனவா வென்று ராணுவத் தலைவர்கள் கவனித்து வருகிறார்கள்.

ஸ்பெயின் யுத்தம் ஆரம்பமானதும், பிறர் ரத்தத்தை ஏற்றிச் சோஸ்தம் செய்யும் முறையை அவர்கள் கைகொள்ள வில்லை. ஆனால் 6 மாதம் கழிந்ததும் இம்முறையை அதிக மாக அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டனர். ரத்த உதவி செய்யவென்றே தேசாபிமானமுள்ள பல ஸ்பானியப் பெண் கள் பார்ஸலோனாவிற்கும் வாலன்ஸியாவிற்கும் சென்று ரத்தத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்புகிறார்கள்.

இந்த ரத்தத்தை உஷ்ணங்கெடாமல் பாதுகாத்து தனி வண்டிகளில் ஃபார்முனையிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்புகிறார்கள்.

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தார் வருஷந்தோறும் சுமார் 5000 பேரை ரத்தங் கொடுக்கும்படிக் கோரிக்கொண்டு வருகின்றனர்.

கண்ட விதம்.

இவ்விதம் நோயாளிகள் உடம்பில் பிறர் ரத்தத்தை ஏற் றும் முறை எப்படி வந்தது? 1667-ல் பிரஞ்சு வைத்தியரான ஜீன்மான்ட் பெல்லிபர் முதன் முதல் இம்முறையை அனுஷ் டித்து வெற்றியும் பெற்றார். இவர் முதலில் கன்றுக்குட்டி களின் ரத்தத்தை எடுத்தே உபயோகித்தார். ஆனால் இம் முறையைப்பிறகு கைவிட்டுவிட்டார்.

பிறகு மனிதர் ரத்தத்தையே இந்தமாதிரி சிகிச்சை களுக்கு உபயோகிக்கும் முறை வந்தது. ஆனால் சரியான ரத்தத்தை உபயோகிக்கும முறை தெரியாததினால், அநேக நோயாளிகள் இறந்து விட்டனர். அதன் பின்னர் 1907-ல் கானடா வைத்தியரான டாக்டர் கார்மன் பதான் மனிதர் ரத்தத்தில் பலவகைகளிருப்பதைக் கண்டுபிடித்தார். அதன் பிறகே ரத்தத்தைப் புகுத்தி சிகிச்சை செய்யும் முறையில் ஆபத்துகள் ஏற்படாதிருந்தன.

தமிழ்நாட்டுக்கோவில்கள்.

திருவிதாங்கூர்.

(பி. சிதம்பரம் பிள்ளை, பி. எ. பி. எல்.)

சென்னை தர்ம ரக்ஷண சபையைச் சேர்ந்த வரும், 'மத ஸ்தாபனங்கள்' என்ற நூலை இயற்றிய போராசிரியருமான தோழர் P. R. கணபதி ஐயரவர்களே இந்துக் கோவில்களெல்லாம் சர்வதேச சாதிமத சமரஸத் தன்மையுடையன (Cosmopolitan) என்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். "கிறிஸ்தவ ஆலயங்களையும், ஆங்கிலக் கோவில்களையும் போலல்லாமல், இந்துக்களுடைய ஆலயங்கள், அவர்களுடைய மதத்தைப் போலவே சர்வதேச, சாதிமத சமரஸத் தன்மையுடையவையாயிருக்கின்றன. கிறிஸ்தவ ஆலயங்களிலும், ஆங்கிலக் கோவில்களிலும் அந்தந்த இடங்களில் வசிப்பவர்கள மட்டுமே தொழுவதற்கு உரிமையுண்டு; அவர்கள் அவ்வாறு தொழுவதற்குக் கடமைப்பட்டுமிருக்கிறார்களெனவுந் தோன்றுகிறது" என்று தோழர். கணபதிஐயரவர்கள் கூறினபோதிலும் அவரது சர்வதேசாபிமான சமரஸத் தன்மை கொஞ்சம் குறுகியதாகவே காணப்படுகிறது. ஏனெனில் அவரே "நான்கு சாதிகளையுஞ் சேர்ந்த இந்துக்களனைவர்க்கும் யாதொரு தட்டுத் தடையுமின்றி இந்துக் கோவில்களில் நுழைந்து வணங்க உரிமையுண்டென்பது வெளிப்படை" யென முடிக்கின்றார். இதுதான் அவரது சர்வதேசாபிமான சமரஸத் தன்மை! இதைப்பற்றி அதிகமாகப் பின்னால் கூறும்வாம்.

சென்னை ஹைக்கோர்ட்டில் முதலாவது இந்தியன் ஜட்ஜாகவிருந்த காலஞ்சென்ற ஸர். டி. முத்துசுவாமி ஐயரவர்கள் "இந்துக் கோவில்கள், சில குறிப்பிட்ட பழக்க வழக்கங்களை ஒப்புக்கொள்ளும் சாதியார்களுக்காகவும், இந்து சமுதாயப் பிரிவினர்களுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டும் பரிபாலிக்கப்பட்டுமிவரும் ஸ்தாபனங்களாகும்" என்று அபிப்பிராயப்பட்டுள்ளார். இதிலிருந்து அவரு

டைய திட்டமான கருத்து என்னவென்பது நமக்கு வெளிப் படையாக விளங்கவில்லை. ஆனால் மற்றோரிடத்தில், ''மகமதியர், கிழ்ச் சாதிக்காரர்கள் மூதலியோர்களுடைய கன்மைக் காக இந்துக் கோவில்கள் ஸ்தாபிக்கப்படவுமில்லை, பரிபாலிக்கப்பட்டு வரவுமில்லை'' யென்று அவர் சொல்லியிருப்பதிலிருந்து அவரது கருத்து தெளிவாகின்றது.

அவருடைய அபிப்பிராயத்தைப் பரிசீலனை செய்யப்புகுமுன் ஒரு ஜட்ஜ் என்ற நிலைமையில் அவரது பொதுமனப் பான்மை என்னவென்பதைக்குறித்துக் கவனிப்போம்.

''ஸர். டி. முத்துசுவாமி ஐயரவர்கள் எப்பொழுதாவது ஒரு தூக்குத் தண்டனையை ஸ்திரப்படுத்தும்படி கேரிட்டால், வீடு சேர்ந்ததும் அவர் பிராயச்சித்தஞ் செய்துகொள்வார் என்று சொல்லப்படுவதுண்டு. ஒரு சமயம் அவரது வைதீகக் குருக்களுக்கு ஒரு கிரிமினல் வழக்கில் இருநூறு ரூபாய் அபராதம் போடவேண்டி வந்தது. ஜட்ஜ் அவர்கள் வீடு சேர்ந்ததும், குருவுக்கு ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதி அதோடு இருநூறு ரூபாயும் அனுப்பிவைத்தார். இவ்வாறு இப்பெரியார், தான் ஓர் இந்துவென்றரீதியில் மதபக்தியுடனும் நீதிபதியென்ற முறையில் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும், சிஷ்யன் என்ற அளவில் பயபக்தியுடன் தமது கடமையைச் செலுத்திவந்தார்'' என்று அவரைப் புகழ்ந்துரைக்கும் ஒருவர் எழுதியிருக்கிறார்.

காலாவது ஹென்ரி அரசர் காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை விக்மோர் என்பவர் குறிப்பிடுகிறார். சாட்சியத்தைக் கொண்டு ஒரு ஜட்ஜ் ஒரு கைதியைத் தண்டித்தார்; ஆனால் தமது சொந்த அறிவில் அவன் குற்றவாளியல்லவென்று தெரிந்ததால் அரசரிடம் முறையிட்டு அவனை மன்னிக்கும்படி செய்தார். ''ஒரு வழக்கில் சொந்த அனுபவத்தை உபயோகிக்காததால் அதன் முடிவு எவ்வளவு அசம்பாவிதமாகப் போய்விடக்கூடுமென்பது இந்த சம்பவத்தினின்றும் விளங்குகின்றது. கிராமப் பஞ்சாயத்தார்களை நீதிபதிகளாக நியமிக்கவேண்டுமென்று இதனாலேயே காட்டில் கிளர்ச்சி செய்யப்படுகின்றது. வழக்கைப்பற்றியும், சாட்சிகளின் குணங்களைப்பற்றியும் தங்களுக்கு நேராகத் தெரிந்தவற்றை அவர்கள் தீர்ப்புக்கு உபயோகப்படுத்த முடியுமல்லவா? ஆனால் ஒரு நீதிபதி தமக்குத் நிட்டமாகத் தெரிந்த ரகசிய விஷயங்களையாவது உபயோகித்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்

டியது அவசியம்; கட்சிகளிடம் தாம் அறிந்த விஷயங்களைச் சொல்லி, அவர்கள் ஆட்சேபிக்காதிருந்தால் மட்டுமே அவர் விசாரணை செய்து தீர்ப்புச்சொல்லலாம்" என்று ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரவர்கள் மற்றொரு சென்னைக் கேஸில் குறி துள்ளார்.

நீதிமுறைப்படியும், பட்சபாதமின்றியும், மனச்சாட்சி க்கு கர்மையாகவும் நியாயம் வழங்கவேண்டிய நீதிபதி யென்னும் உயர் பதவி வகித்த ஜஸ்டிஸ் முத்துசுவாமி ஐயர வர்கள், ஓரவருக்கு மரண தண்டனை விதிப்பதினிமித்தம் மதக்கோட்பாடுகளைத் தாம் மீறிவிடுவதாகக்கருதி இந்து மதக்கொள்கைப்படி அதனாலேற்படும் பாவத்தைப் பிராயச் சித்தத்தின் மூலம் நிவர்த்தித்துக்கொண்டார். இதிலிருந்து அவர் தமது நீதிபதிபென்ற உத்தியோகத்தையும், மதத்தை யும்பற்றி எவ்வாறு விசித்திரமான அபிப்பிராயங்கொண்டி ருந்தாரென்பது வெளிப்படையாகும்.

இனி, தாழ்த்தப்பட்டவர்கட்காகவும், தீண்டாதார் முத லியோர் கட்காகவும் இந்துக் கோவில்கள் ஸ்தாபிக்கப்படவில் லையென்று கூறிய ஜஸ்டிஸ் முத்துசுவாமி ஐயரவர்களுடைய தீர்ப்பைக் கவனிப்போம். இதைதான் மறுக்கின்றோம். முத லாவது இவ்விதமாக இப்பெரியார் திருவாய் மலர்ந்தருளின தற்கு யாதொரு ஆதாரமுமில்லை. ஒருக்கால் ஸ்மார்த்த பார்ப்பனர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்று ருசுப்பிக்கப்பட்ட கோவில் சம்பந்தப்பட்டவரையிலும் இக்கூற்று உண்மையா யிருக்கக்கூடும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏனெ னில் அவர்களுடைய குறுகிய மனப்பான்மையையும் மக்க ளைப் பிளவுபடுத்தும் மதக்கோட்பாட்டையும், ஆரிய சாதிப் பாகுபாட்டின் இழிவான தன்மையையும், தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களுடைய போலித் தன்மையையும், ஆரிய தெய் வங்களைமட்டும் பிரதிஷ்டை செய்வதையும் யாகங்களை மாத் திரம் பாராயணம் பண்ணுவதையும் இவைபோன்ற பலவற்றை யும் அவர்களுடைய ஸ்தாபனத்தில் காம் கண்கூடாணமுடியும். பொதுப்பணத்திலிருந்து நிர்வகிக்கப்படும் வேத பாடசாலை களும், பிராமண விதவா விடுதிகளுட, சர்வ தேசாபிமான பிராமணனுடைய தயாள குணத்துக்குத் தக்க சான்றுகளாக இன்றுமிருந்து வருகின்றனவன்றோ?

ஆனால் தென்னிந்தியாவில் ஸ்மார்த்தமும், பிராமணீய முங்கூட தலைகாட்டுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்னர்

தமிழ் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட நமது பண்டைப் பொதுக் கோவிலகளைப் பொறுத்தமட்டிலும் ஜஸ்டிஸ் முத்துசுவாமி ஐயரவர்களுடைய கூற்று ஒரு பொழுதும் உண்மையாக இருக்கமுடியாது; அதை ஒரு பொழுதும் அங்கிகரிக்கவும் முடியாது அக்காலத்தில் நாடு முற்றும புத்த, சமணக் கோவில்களும், படங்களும் மலிந்து கிடந்தன; இம்மதங்கள் ஒவ்வொன்றும் போட்டி போட்டு ஆள் திரட்டிக்கொண்டிருந்திருக்க வேண்டுமென்றோ? இந்தக் கோவில்களை ஸ்தாபித்த ஆசார்கள் தாமே நிமிஷத்திற்கு நிமிஷம் சைவத்திலிருந்து சமணத்திற்கும் சமணத்திலிருந்து பௌத்தத்திற்கும் தங்கள் இஷ்டம்போல் மதம் மாறிக்கொண்டிருந்தனர். மதப்பொறுமையும், மதச் சுதந்திரமும் தாராளமாக நிலவி வந்தன. அக்காலத்தில் சாதிவித்தியாசம் தமிழ் நாட்டிலில்லை; அல்லது மெல்ல மெல்லத் தலைகாட்டத் தொடங்கிற்று என்று சொல்லலாம் ஆரியக் கடவுளுக்காகவன்றி, ராக்ஷஸர்கள், அசுரர் களென ஆரியர் மதித்த திராவிடத் தெய்வங்களுக்காகவே இந்தக் கோவில்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்தக் கோவில் களுக்குள் வேத சுலோகங்களைப் படிக்கக்கூடாது. கற்பக் கிரகத்துக்குள் பார்ப்பான் நுழைந்தால் நாட்டிற்கும், அரசனுக்கும் கேடு விளையுமென்று நம்பப்பட்ட காலம். இவை யெல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயமென்ன வென்றால், இந்தப்பொதுக்கோவில் வருமானமெல்லாம் பிராமணர் வயிற்றுக்குள் போகாமல் அரசன் பொக்கிஷத்தைச் சேர்ந்ததென்பதாகும். இத்தகைய காலத்தில் ஏற்பட்ட பொதுக்கோவில்கள் விஷயத்தில் கற்றறிந்த பிராமண நீதிபதியான ஜஸ்டிஸ் முத்துசுவாமி ஐயாவர்களின் கூற்றைப் பொருத்துவது மிகப் பெரிய அநீதியாகும் என்று நான் மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பிரபல இந்திய நீதிபதி 1929-ம் வருஷத்தில் அடியில் வருமாறு எழுதியுள்ளார்:—

"உயர்சாதிக்காரர்களுக்காகவே கோவில்கள் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதாகவும், நெடுங்காலமாக இந்த உயர் சாதிக்காரர் களனுபவித்துவந்த தனித்த உரிமைகளைப் பறிமுதல் செய்வது நியாயமாகவோ, சட்டத்திற்குப் பொருத்தமாகவோ இருக்காதென்பதாகவும் வாதிக்கப்படுகிறது. இருந்தாலும் தற்பொழுதுள்ள அமிதமான சாதிபேதமானது சமீபகாலத்தில்தான் தலைகாட்ட ஆரம்பித்திருக்கவேண்டுமெனக் கருதயிடமிருக்கிறது. பிராமணர்கள் கோவில்களை ஸ்தாபித்ததுமிக

சமதர்மத்திட்டம்

"தனி உடமையை ஒழிக்கவேண்டும்; இல்லாவிட்டால் மனித தேவைக்கு வேண்டிய பொருள்கள் நியாயமான முறையில் செலவழியாது. உலகமும் கேரிய வழியில் ஆளப்படாது. (தாமஸ் மூர்)

சமதர்மத்தில் பலவகை இருக்கின்றன; சமதர்மம் என்றால் என்னவென்று நிச்சயக்கமுடியாது என்று பலர் அடிக்கடி கூறுகின்றனர். இது ஓர் வகையில் உண்மையே. ஆனால் சமதர்மத்தை நன்குணர்ந்தவர்கள், சமதர்மிகளுக்குள் லட்சியத்தில் யாதொரு வித்தியாசமில்லையென ஒப்புக்கொள்ளுவார்கள். அந்த லட்சியம் ஒன்றே ஒன்றுதான். அது "மார்க்ஸிஸம்" எனப்படும். இதை அடைவதற்கு வழி மிக அபூர்வமான சம்பவமாகும். தென்னிந்தியாவிலுள்ள கோவில்களில் மிகப்பெரும்பாலானவையும் சூத்திரமன்னர்களாலோ, அல்லது சூத்திரர்களுடைய தர்மங்களிலிருந்தோதான் கட்டப்பட்டிருக்கவேண்டும். திருவிழாக் காலங்களிலும் பூஜைகாலங்களிலும் திரட்டப்படும் காணிக்கைகளின் பெரும்பாகம், இன்று ஆலய வழிபாட்டினின்றும் தடைப்படுத்தப்பட்ட வகுப்பார்களாலேயே அளிக்கப்படுவதைக் காண்கிறோம். இம்மாதிரி திரட்டப்பட்ட நிதியைக் கவனமாகப் பாதுகாத்து, அதைக்கொண்டு பெரிய ஆலயங்களைக்கட்டி, பெருட்பொருள் கொடுத்த மக்கள் இக்கோவில்களுக்குள் பிரவேசிக்காமலிருக்கும் பொருட்டு அவற்றைச்சுற்றிக் கோட்டைகளைவிடப்பலமான சுவர்களையும் எழுப்பிவிடுகிறார்கள்..... ஆரம்பத்திலிருந்த கோவில்கள் அனேகமாக சூத்திரக் கோவிலாகவே இருந்தது. அங்குமிங்கும் இதற்கு மாறுபாடாகச் சில கட்டப்பட்டிருக்கலாம். ஒரு பணக்காரப் பார்ப்பன் ஒரு கோவிலை ஸ்தாபித்து அதற்கு மான்யமும் விட்டிருக்கக்கூடும். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது கோவில்களின் ஸ்தாபனத்துக்கும், வழிபாட்டுக்கும், பரிபாலனத்துக்கும் பார்ப்பனரல்லாத மக்களே பணங் கொடுத்திருக்கிறார்கள் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை. இன்றைய தினம் இவர்களிற் பெரும்பாலானைக் கோவிலுக்குள் போகக்கூடாதென்றும், போகக்கூடியவர்கள் இரண்டாவது சுற்றுப்பிராகாரம் வரைத்தான் செல்லலாமென்றும் தடுக்கிறார்கள்.

களோ பல உள. அவைகளில் முதன்மை வாய்ந்தது ரஷிய பொதுவுடமைக்காரர்கள் கையாண்ட வழி. ஏனெனில் இது வரையிலும் இவர்கள்தான் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். மற்ற தேசத்திலுள்ள சமதர்மிகள் ரஷ்ய பொதுவுடைமைக் காரர்கள் பின்பற்றிய வழியில்லாதவைகளைக் கையாண்டு தோல்வி அடைந்திருக்கின்றனர்.

நான் இப்பொழுது சமதர்மத்தை அடைவதற்கு நாம் கையாள வேண்டிய வழிகளைப்பற்றி கூறப்போவதில்லை. சமதர்மத்தின் அடிப்படையான கொள்கை என்னவென்று வாசகர்களுக்கு அறிவிக்கப் போகின்றேன்.

சமதர்மம் ஒரு சமூக சீரமைப்புத் திட்டமாகும். இது ஒரு மனிதன் தனிப்பட்ட முறையில் பின்பற்றக்கூடிய வாழ்க்கைத் திட்டமல்ல. நீங்களும் நானும் அப்பியசிக்கக்கூடியதல்ல. அல்லது திடீரென்று முளைத்து வரக்கூடியதல்ல. சமதர்மத்தை இந்தியாவில் புகுத்தவேண்டுமென்று சொல்லும் பொழுது, நமது தற்கால சமூகம் முழுவதையும் மாற்றி அமைக்கவேண்டுமென்று நாம் எண்ணுகின்றோம். ஒரு தனி கிராமத்தையோ ஒரு தொழிற்சாலையையோ சமதர்ம முறையில் நடத்தினால் அது சமதர்மமாகாது.

நமது சமூகத்தில் முதலில் நமக்குத் தென்படுவது, மிக மனக்கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய இந்த உயர்வு தாழ்வு என்ற வித்தியாசம். இவ்வித்தியாசத்தை எல்லா வகையிலும் காண்கின்றோம். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்லொருள்களெல்லாம், மிகப் பரிதாபகரமான வழியில் செல வழிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையோர் வறுமை, பசி, அழுக்கு, வியாதி, அறியாமை, முதலியவைகளினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க, குறிப்பிட்ட சிறு பான்மையோர் மாத்திரம் சுக போகம், டாம்பீகம், கல்வி, பதவி, அதிகாரம் ஆகிய இவைகளை அநுபவித்து வருகிறார்கள். உண்மையில் இந்த துரதிர்ஷ்ட இந்தியாவைத் தவிர்த்து வேறு எந்நாட்டில் ஒரே சமயத்தில் இத்தனைய தரித்திரமும், செல்வமும், நிறைவும், குறைவும் காணமுடியும்? அதேகசமூகக் கோளாறுகளுக்குக் காரணமாகிய இவ்வுயர்வு தாழ்வு என்ற வித்தியாசத்தைப் போக்குவதற்கு, அந்தந்தக்காலத்திலுள்ள பெரியார்கள் தங்களுக்குத்தெரிந்த யோசனைகளைக் கூறி வந்திருக்கின்றனர். தான தருமம் செய்தல், உடையவர்கள் இல்லாதவர்களிடத்தில் அன்புடன் நடந்து கொள்ளுதல், ஏழ்

மையைப் பெருமைப்படுத்திச் சொல்லல், வாழ்க்கைத் தேவை களைக் குறித்துக் கொள்ளுதல் முதலியவைகளெல்லாம் மேற் கூறிய உயர்வு தாழ்வு என்ற துன்பத்தை நீக்குவதற்குப் பரி காரமாக சொல்லப்பட்ட யோசனைகளாகும். இவைகளை அசேகர் பின்பற்றியும், அவர்கள் கஷ்டம், ஏழ்மை தீர்ந்த பாடில்லை.

ஆனால் சமதர்மிகள் வழி வேறு விதம். நோயின் மூல காரணத்தை கண்டுணர்ந்து, மறுபடியும் நோய் திரும்பாவண் ணம் அதைக் களைய சமதர்மிகள் ஆசைப்படுகின்றார்கள்.

சாதாரணமாக மனிதர்கள் பிறவியிலேயே வித்தியாசங் களுடன் தோன்றுகிறார்கள். இப்பிறவி வித்தியாசங்களை எவ்வளவு முயன்றாலும் அவைகளை நீக்குவதற்கு முடியாது என்று அசேகர் சொல்லுகின்றனர். மனிதர்கள் சமமாகப் பிறக்கவில்லை யென்பதையும், மிக வித்தியாசங்களுடன் காணப்படுகின்றார்களென்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவ்வித்தியாசங்களை ஒழிக்க முடியாதென்று கூறும் பொழுதுதான் நான் "இல்லை" என்று சொல்லவேண்டிய தாயிருக்கிறது. ஏனென்றால் இப்பிறவி வித்தியாசங்கள் மனி தர்கள் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு எவ்வளவு தூரம் இடையூறாக இருக்கின்றனவென்று கவனித்தோமானால் அதிகமில்லையென்றே கூறலாம். இவ்வியற்கை வித்தியாசங் களைப் பொருட்படுத்தாது, எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளித்தால் ஒவ்வொருவரும் முன்னுக்கு வரலாம் என்பதில் ஐயமில்லை. இப்பொழுது பொருளுடையவர்களுக்குத்தான் எல்லாவித சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றன. ஆகையினால் இவர்கள் கல்வி காகரீகம் முதலியவைகள் அடைந்து சமூகத் தில் உயர் நிலையில் இருக்கின்றனர், பொருள் இல்லாதவர் களுக்குப் புத்தியிருந்தும், சக்தியிருந்தும் யாதொரு சந்தர்ப்ப மில்லாது தவிக்கின்றனர். ஆகையினால் இவர்கள் நசித்துக் கொண்டே வருகின்றனர். எக்காரியத்திற்கும் பணம் மிக்க அவசியமானதால் இது ஒரு சிலர் கையில் மாத்திரம் அதிகம் தங்கவிடாது எல்லோரிடத்திலும் சமமாகப் பரவியிருக்கும் படிச் செய்யவேண்டியதவசியமாகின்றது.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)≑(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள் ? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	,,	0 5 0

Hon பெர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல ?	...	,,	0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன ?	...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன ?	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன் ?	...	,,	0 3 0
வால்ட்டேர் ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
ஷ	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்			0 4 0
ஷ	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண் ணுரிமையும், மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”)	...	,,	0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா ?	(ல. ப. நூ. பி.)		0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவம்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஎன் இவ்வுலகமில்லை	0	1	0
6	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7	,, அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் சுன்காம்பதிப்பு200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபன்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ.ரா இலங்கை உபன்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபன்யாசம்	0	0	6
24.	சோதிடஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	ராகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யம்கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press Erode.